# ஈசாப் கதைப் பாடல்கள்

குழந்தைக் கவிஞர்



# ஈசாப்
# கதைப் பாடல்கள்

குழந்தைக் கவிஞர்

அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை

பாரி நிலையம்

184. பிராட்வே · சென்னை · 600108

# AESOP KATHAI PADALKAL

(Translation of Aesop's Fables in Verses)


| | | |
|---|---|---|
| Author | : | AL. VALLIAPPA |
| Illustrator | : | SAGAR |
| Copyright | : | Author |
| Publisher | : | Kulandai Puthaka Nilayam.<br>Madras-40 |
| Printer | : | Jeevan Press,<br>Madras-5 |
| Sole Distributer | : | Paari Nilayam,<br>Madras-5 |
| First Edition | : | January, 1987<br>(Combined Volumes) |
| Price | : | Rs. 8/- |

விலை : எட்டு ரூபாய்

வெளியிட்டோர் :
குழந்தைப் புத்தக நிலையம்,
சென்னை–40.

# பதிப்புரை

நரியும் திராட்சையும், ஓநாயும் ஆட்டுக்குட்டியும், சிங்கமும் சுண்டெலியும் என்ற கதைகளெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கதைகளைக் கூறியவர் யார் என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர்தாம் ஈசாப்.

ஈசாப் கூறிய கதைகள் நூற்றுக் கணக்கில் உள்ளன. அவரது கதைகளில் மிருகங்கள், பட்சிகள் யாவும் பேசுகின்றன. அவற்றின் பேச்சுக்கள் நமக்குப் புத்தி புகட்டுகின்றன.

ஈசாப் கதைகளில் உள்ள பல அற்புதக் கருத்துக்களை அழகிய பாடல்களாக்கி 'பாலர் மலர்', 'பூஞ்சோலை' ஆகிய இரு பத்திரிகைகளின் வாயிலாகத் தந்தார் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள். அவர் எழுதிய பாடல்களில் சிலவற்றைத் தொகுத்து முன்பு இரு தொகுதிகளாக வெளியிட்டோம். இப்போது அந்த இரு தொகுதிகளிலிருந்த பாடல்கள் அனைத்தையும் ஒரே தொகுதியாகத் தந்திருக்கிறோம்.

சென்னை
30-1-87

பதிப்பாளர்




உதவியும் யோசனையும் 10
கோழி கண்ட வைரம் 13
அதிக ஆசை 15
இரண்டு பெண்டாட்டிக்காரர் 17
சபையோர் தீர்ப்பு 20
நரிக்குத் தண்டனை 27
அழகுக் கொம்புகள் 30
வெள்ளைக் காக்கை 34
ஜாடித் தேன் 37
வித்தியாசம் 39
குருவியும் கருமியும் 41
சேவலின் கர்வம் 44
குரங்கின் குறும்பு 46
தாயின் தவறு 48
கழுதை நிழல் 51
தந்திர மகிமை 54
தண்டனை 58
பெண் கேட்ட சிங்கம் 61
வல்லவனுக்கு வல்லவன் 66
அடிமை வாழ்வு 69
நல்ல பதில்! 71
முன் யோசனை 73
தேர்தல் 75
ஜாதி நாய் 77
பசுவின் கேள்வி 79
ஏமாந்த ஆடுகள் 81
இரண்டு பானைகள் 84
கொசுக்கடி 86
ஓநாயின் கேள்வி 89
தீராத பகை 91
காரணம்? 94
எலிப் படை 98
கழுகும் காக்கையும் 101
இன்பமும் துன்பமும் 104
சோதிடர் ஓடினார்! 107
பரிசு 110
ஏமாற்றம் 113
ஒருநாள் வாழ்வு 115



# குட்டிக் கதை மன்னன்

தெருவில் குழந்தைகள் ஆடிப்பாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்தார் ஒரு பெரியவர். உடனே, குழந்தைகள் கூட்டத்தில் புகுந்தார்; அவர்களுடன் சேர்ந்து விளையாட ஆரம்பித்துவிட்டார்.

அச்சமயத்தில் அவ்வழியாக வந்தான், ஒருவன். ஒரு பெரியவர் குழந்தைகளுடன் சேர்ந்து குதித்து விளையாடும் காட்சியை அவன் கண்டான். உடனே, அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

''ஓய் பெரியவரே, உமக்கு என்ன வயதாகிறது! நீர் இப்படிக் குழந்தைகளுடன் சேர்ந்துகொண்டு கும்மாளம் போடுகிறீரே! தராதரமே உமக்குத் தெரியவில்லையே!'' என்று கேட்டான், அவன்.

உடனே, அந்தப் பெரியவர் சிரித்தார், சிரித்துக் கொண்டே அங்கிருந்த ஒரு வில்லை எடுத்தார். வில்லின் இரு நுனிகளுக்கும் இடையே கட்டப்பட்டிருந்த கயிற்றை (நாண்) அவிழ்த்தார். பிறகு அதைக் கீழே போட்டுவிட்டு அந்த மனிதனைப் பார்த்தார். பார்த்து,

''நண்பரே, இதோ இருக்கிறதே வில், இதை எப்போதும் கட்டியே வைத்திருந்தால், இது நன்றாக வேலை செய்யாது. அதாவது அம்பை எய்யும்போது இது நன்றாக வளைந்து கொடுக்காது. அதனால் அம்பும் வேகமாக நீண்ட தூரம் செல்லாது. சில சமயங்களில் முறிந்துகூடப் போய்விடலாம்! தேவையில்லாதபோது கயிற்றை அவிழ்த்துவிட்டால்தான் வில்

நன்ருக வேலை செய்யும்; அம்பும் வேகமாகச் செல்லும். வில்லைப்போல்தான் நாமும். எப்போதும் பெரியவர்களாகவே இருக்க வேண்டும் என்று நாம் நினைப்பது நல்லதல்ல. கொஞ்ச நேரமாவது நாம் பெரியவர்கள் என்பதை மறந்து, குழந்தை யோடு குழந்தையாக இருந்தால்தான் நமக்கு உற்சாகம் ஏற்படுகிறது; வாழ்க்கை திருப்தியளிக்கிறது'' என்ருர்.

இதைக் கேட்டதும், அந்த மனிதனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை; பேசாமல் அவ்விடத்தை விட்டு நழுவிவிட்டான்!

அந்தப் பெரியவர் இம்மாதிரி எத்தனையோ உதாரணங் களைக் காட்டியிருக்கிருர். எத்தனையோ குட்டிக் கதை களைக் கூறியிருக்கிருர். அவர் கூறிய குட்டிக் கதைகள் ஒன்ரு, இரண்டா? சுமார் 300-க்கு மேலிருக்கும். அந்தக் கதைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. கிறிஸ்தவ வேதமான பைபிளுக்கு அடுத்தபடியாக உலகில் அதிகமானவர்கள் படித்துவரும் கதைகள் அவருடைய கதைகள்தாம்! ஒவ் வொன்றும் ஒவ்வொரு நீதியைக் கூறும்; உயர்ந்த கருத்தை எடுத்துக் காட்டும்.

இப்போது பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் நாம் பல கதைகளைப் படிக்கிருேம். ஆனல், அந்தப் பெரியவர் காலத் தில் பத்திரிகையும் இல்லை; புத்தகமும் இல்லை. அவர் இதை எதிலுமே எழுதி வைக்கவில்லை. அப்படியானல், அவருடைய கதைகளை உலகிலுள்ளவர்கள் எப்படிப் படிக்க முடியும்?

அவர் தெருவிலே போய்க் கொண்டிருப்பார். அப்போது இருவர் சண்டை போட்டுக் கொள்வார்கள். உடனே அவர், சண்டை போடாமல் அவர்களைத் தடுப்பார்; அங்கேயே, ஓர் அழகான கதையையும் கூறுவார். உடனே, அந்த இருவரின் கோபமும் பறந்துவிடும். சண்டை போட்டது தவறு என்று உணர்ந்து விடுவார்கள்.

இதேபோல் அவர் கதைகளைக் கூறிக் கூறி, நாட்டில் நடக்கும் கலகங்கள், சண்டைகள் முதலியவற்றையெல்லாம் அடக்கியிருக்கிறார்.

ஒரு சமயம், ஒரு பெரிய நகரத்தில் மக்கள் கலகம்செய்து வந்தார்கள். அவர்களுக்கு அங்கிருந்த அரசனைப் பிடிக்க வில்லை. வேறு ஓர் அரசன் வேண்டுமென்றுதான் அவர்கள் கலகம் செய்தனர்.

அப்போது, அந்தப் பெரியவர் அங்கே சென்றார். அவரிடம் கலகக்காரர்கள், ''எங்களுக்கு இந்த அரசர் வேண்டாம். வேறு யாராவது அரசராக வரட்டும்'' என்றனர்.

உடனே, அந்தப் பெரியவர் அவர்களுக்கு ஒரு கதை சொன்னார்: ஒரு குளத்தில் சில தவளைகள் வசித்து வந்தன. அவைகள் தங்களுக்குள்ளேயே ஓர் அரசனைத் தேர்ந்தெடுக்க விரும்பவில்லை. வெளியிலிருந்து யாராவது தங்களது அரசராக வரவேண்டுமென்று கடவுளை வேண்டின.

கடவுள் அவற்றின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு நாரையை அரசனாக அனுப்பி வைத்தார். நாரை வந்ததும் ஒவ்வொரு தவளையாகப் பிடித்து விழுங்க ஆரம்பித்துவிட்டது. உடனே, அவை கடவுளிடம் திரும்பவும் முறையிட்டன. அப்போது கடவுள், 'உங்களுக்குள்ளேயே ஒரு தவளையை அரசனாகத் தேர்ந்தெடுக்காமல், வெளியிலிருந்து யாராவது அரசனாக வரவேண்டும் என்கிறீர்களே, அதன் கதி இது தான்!' என்றார்.

—இந்தக் கதையை அவர் கூறியதுமே கலகக்காரர் உண்மையை உணர்ந்தனர். வேறு ஒருவரை அரசனாக்கி, அவனால் நிலைமை மோசமாகிவிட்டால் என்ன செய்வது? ஆகையால், அவர்கள் கலகத்தை நிறுத்திவிட்டனர். சமாதானம் நிலவியது.

இப்படி அரசர்களுக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட பல விரோதங்களை யெல்லாம், அவர் தம்முடைய குட்டிக் கதை

களால் தீர்த்து வைத்திருக்கிறார். அவ்வப்போது அவர் கூறி வந்த கதைகளை அவர் காலத்தில் இருந்தவர்களும், பின்னால் வந்தவர்களும், வாய்மொழியாகக் கூறி வந்திருக்கிறார்கள்.

அவர் இந்தக் கதைகளை எந்த மொழியில் கூறிவந்தார்? தமிழிலா? இல்லை, ஆங்கிலத்திலா? அதுவும் இல்லை. கிரேக்க மொழியில்தான் கூறி வந்தார்! ஆம், அவருடைய தாய்மொழி அதுதான். அவருடைய தாய்நாடும் கிரேக்க நாடுதான்.

கிரேக்க நாட்டில், கிறிஸ்து பிறப்பதற்கு 620 ஆண்டுகளுக்கு முன்பு அவர் பிறந்ததாகத் தெரிகிறது. ஆனால், கிரேக்க நாட்டில் அவர் எந்த ஊரில் பிறந்தார் என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை. 'எங்கள் ஊரில்தான் பிறந்தார்; எங்கள் ஊரில்தான் பிறந்தார்' என்று இப்போது ஆறு ஊர்க்காரர்கள் பெருமையாகக் கூறி வருகிறார்கள். ஒருவர் எப்படி ஆறு ஊர்களில் பிறந்திருக்க முடியும்? ஏதாவது ஒரே ஓர் ஊரில்தானே அவர் பிறந்திருப்பார்? சில ஆராய்ச்சியாளர்கள் அவர் 'சாமோஸ்' என்ற ஊரில்தான் பிறந்திருக்க வேண்டும் என்கிறார்கள். ஊரின் பெயரைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். ஆளின் பெயரைத் தெரிந்து கொண்டாலே போதும். அவர்தாம் ஈசாப்.

ஈசாப் சொன்ன கதைகளை யெல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து 1485-ஆம் ஆண்டு முதல் முதலாக வெளியிட்டார்கள். அதன் ஒரு பிரதி இப்போதுகூட பத்திரமாக பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் (British-Museum) கண்ணாடி அறைக்குள் வைக்கப்பட்டிருக்கிறதாம். இப்போது பல மொழிகளில் அந்தக் கதைகள் வெளிவந்துவிட்டன. தமிழில்கூட அவரது கதைகளில் பலவற்றை நீங்கள் படித்திருப்பீர்கள். இப்போது அவற்றைப் பாடல்களாகப் படிக்கப் போகிறீர்கள்.



ஈசாப்

ஸ்பெயின் தேசத்து ஓவியர் வெலாஸ் குயிஸ் என்பவரால் கற்பனை செய்து எழுதப்பட்ட படம் இது.

# உதவியும் யோசனையும்



ஊரின் அருகே அழகாக
உள்ள ஆற்றங் கரைவழியே

சென்றார் ஒருவர். அப்பொழுது
செவிகளில் வீழ்ந்தது குரலொன்று.

'ஐயோ! அப்பா!' எனும்சத்தம்
ஆற்றின் நடுவே கேட்டிடவே,

சத்தம் வந்த திசைதனிலே
'சட்'டெனப் பார்த்தார் அம்மனிதர்.

பையன் ஒருவன் தண்ணீரில்
பரிதவிப் பதையே கண்டனரே.

கண்டதும் அவனை உடனேயே
காத்திடும் வழியைத் தேடாமல்,

"ஏண்டா, முட்டாள் பயலேநீ
இதனில் இறங்கிட லாமோடா?

எத்தனை பேர்கள் இதில்இறங்கி
இறந்தனர்! நீயும் அறியாயோ?

எனது புத்தி மதிகளை நீ
என்றும் கேட்டு நடந்திடுவாய்,

அவையே உனக்கு எப்பொழுதும்
அதிகத் துணையாய் நிற்குமடா"

என்றே அவரும் கூறுகையில்
ஏங்கித் தவித்த அப்பையன்,

"ஐயா, உயிரோ போகிறதே!
அடியேன் பிழைத்திட இப்பொழுதே

உதவி செய்தால் பலனுண்டு.
யோசனை அப்புறம் கூறிடலாம்.

ஐயோ! உதவி! உதவி!" என
அலறினன். உடனே அம்மனிதர்

உணர்ந்தனர் பையன் நிலைமைதனை;
உடனே ஆற்றில் பாய்ந்தனரே!

பாய்ந்தே அவனைக் கரைதனிலே
பத்திர மாகச் சேர்த்தனரே!

சிறுவன் பிழைத்தான், அவருடைய
சிறந்த உதவி பெற்றதனால்.

உதவி எதுவும் செய்யாமல்
யோசனை சொல்வதில் பலனுண்டோ?

'இல்லை, இல்லை' என்றேதான்
இக்கதை மூலம் உணர்கின்றோம்.

# கோழி கண்ட வைரம்



கோழி ஒன்று 'குடுகு' டென்று
ஓடி வந்ததாம்—வந்து
குப்பை மேட்டில் ஏறிக் கிளறிக்
கிளறிப் பார்த்ததாம்.

தின்ன ஏதும் தானியந்தான்
அங்கே இல்லையாம்—பசி
தீர்த்துக் கொள்ள வழியில் லாமல்
ஏங்கி நின்றதாம்.

அந்தச் சமயம் தரையில் ஏதோ
பளபளத்ததாம்—மிக்க
ஆவ லாக அருகிற் சென்று
கூர்ந்து பார்த்ததாம்.

கண்ணைக் கவரும் வைரம் ஒன்றைத்
தரையில் கண்டதாம் —உடன்
கலக்கத் தோடு அதனைப் பார்த்துக்
கோழி சொன்னதாம்:

“மதிப்பு மிகவும் உயர்ந்த தென்று
மனிதர் கூறிடும் —நல்ல
வைர மேநான் உன்னை வைத்து
என்ன செய்குவேன்?

நெல்லில் ஒன்றே இந்த நேரம்
எனக்குக் கிடைப்பினும்—நான்
நிகரி லாத மகிழ்ச்சி யோடு
கொத்தித் தின்னுவேன்.

பாரில் உள்ள வைரம் யாவும்
ஒன்று சேரினும்—என்
பசியைத் தீர்த்து வைக்கும் சக்தி
இல்லை; இல்லையே!”



# அதிக ஆசை



சிங்கம் ஒன்று இரைதனைத்
தேடித் திரியும் வேளையில்
அங்கே வழியில் ஒருமுயல்
அயர்ந்து தூங்கக் கண்டது.

"இந்த முயலைக் கொல்லுவோம்"
என்று சிங்கம் செல்கையில்,
அந்த வழியில் வந்தஓர்
அழகு மானைக் கண்டது.

"துள்ளி ஓடும் மானைநாம்
துரத்திக் கொல்வோம் முதலிலே,
மெள்ள வந்து, தூங்கிடும்
முயலைப் பிறகு தின்னலாம்"

சிங்கம் இதனை எண்ணியே
'திடுதி' டென்று ஓடியே,
அங்கு வந்த மானையே
அடித்துக் கொல்லச் சென்றது.

சத்தம் கேட்டு முயலுமே
'சட்'டென் றுடனே விழித்தது;
'செத்துப் பிழைத்தோம்!' என்றது;
சென்று எங்கோ மறைந்தது!

பள்ளம், மேடு யாவிலும்
பாய்ந்து சிங்கம் ஓடியும்,
துள்ளி ஓடும் மானையே
துரத்திப் பிடிக்க வில்லையே!

தோற்றுப் போன சிங்கமோ
தொங்கிப் போன முகத்துடன்
பார்த்து வைத்த முயலினைப்
பாய்ந்து கொல்ல வந்தது.

முன்னே பார்த்த இடத்திலே
முயலைக் காணுச் சிங்கமோ
ஒன்றும் தோன்றி டாமலே,
உள்ளம் வெம்பி உரைத்தது.

"கையில் கிடைத்த பொருள்தனைக்
காற்றில் பறக்க விட்டேனே!
ஐயோ! இரண்டும் போனதே!
அதிக ஆசை கெடுத்ததே!"



# இரண்டு பெண்டாட்டிக்காரர்

அற்புத சாமி நல்லவராம்.
அவர்க்கு இரண்டு மனைவியராம்.

மூத்தவள் அவரைக் காட்டிலுமே
மூன்று வயது முதிர்ந்தவளாம்.

இளையவள் அவரது வயதைவிட
எட்டு வயது குறைந்தவளாம்.

ஒருநாள் இளையவள் அவர்தலையை
உற்றுப் பார்த்தனள்; பார்த்ததுமே,

"ஐயோ! தலைமயிர் நரைக்கிறதே,
அனைவரும் என்ன சொல்லிடுவர்?

'கிழவரை மணந்த குமரி'யெனக்
கேலி செய்வரே! என்செய்வேன்?"

என்றே அவளும் எண்ணினளே;
இதற்கொரு வழியும் கண்டனளே.

தினமும் காலையில் அவர்தலையில்
தெரிந்திடும் நரைமயிர் சிலவற்றை

'வெடுக்கு வெடுக்'கெனப் பிடுங்கினளே.
வேதனை யால்அவர் குதித்தனரே!

∴ ∴ ∴

மூத்தவள் மட்டும் சளைத்தவளா?
மும்முர மாக எண்ணினளே:

"எனது தலையில் பெரும்பகுதி
ஏற்கென வேதான் நரைத்துளதே.

என்றன் கணவரின் தலையுடனே
எனது தலையைப் பார்ப்பவர்கள்,

'வாலிப ரான கணவர்க்கு
வாய்த்தனள் நரைத்த கிழவி'யென

என்னைக் கேலி செய்திடுவர்.
இதற்கொரு வேலை செய்திடலாம்"

என்றே எண்ணினள். அதன்படியே
எழுந்ததும் தினமும் அவர்தலையில்

கறுப்பாய் உள்ள மயிர்களையே
கருத்துடன் அகற்றிட லாயினளே.

தலையில் ஒருமயிர் பிடுங்கிடினும்
தாங்கிட நம்மால் முடிகிறதோ?

எப்படி அற்புத சாமியுமே
இதனைப் பொறுத்தனர் ? யானறியேன் ;

தினம்தினம் மனைவியர் இருவருமே
சிலசில மயிர்களை அகற்றியதால்

குறைந்தன ; குறைந்தன ; வெகுவிரையில்
மறைந்தன தலைமயிர் யாவையுமே !

கத்திகள் எவையும் இல்லாமல்
கைத்திறம் ஒன்றே துணையாக

மொட்டை அடித்தனர் அவர்தலையை,
மூத்தவள், இளையவள் இருவருமே !

'சீப்பும் எண்ணெயும் இனிவேண்டா.
சிக்கன மாக வாழ்ந்திடலாம்'

என்றே அற்புத சாமியுமே
எண்ணிட வில்லை, அச்சமயம் !

"இருவரை மணந்தேன். ஆதலினால்,
என்றன் தலையும், ஐயையோ !

பாலை வனமாய்ப் போனதுவே !
பட்டது போதும்" என்றனரே !


சபையோர் தீர்ப்பு!

பிரபு ஒருவர் தம்ஊரில்
பெரிய கொட்டகை கட்டிஅதில்
இரவில் காட்சிகள் நடத்திடவே
ஏற்பா டெல்லாம் செய்தனரே.

அற்புத மான வித்தைகளை
அங்கே காட்டிடும் அனைவர்க்கும்
பற்பல பொருளை அப்பிரபு
பரிசாய்க் கொடுத்தனர் நித்தமுமே.

கட்டணம் எதுவும் வாங்காமல்
காட்சிக ளெல்லாம் காட்டியதால்,
கொட்டகை நிறைய மக்களுமே
கூடினர் தினமும் இரவினிலே.

∴ ∴ ∴

ஒருநாள் மேடையில் கோமாளி
ஒருவன் வந்து நின்றனனே.
"அரிய பெரிய வித்தையெலாம்
அடியேன் செய்வேன் ; கண்டிடுவீர்.

பன்றி போலக் கத்திடுவேன் ;
பார்த்தே அதிசயம் அடைவீர்கள்"
என்றே கூறிக் குனிந்தனனே ;
'ஈக்பீக் ஈக்' எனக் கத்தினனே.



2994—2

"உண்மைப் பன்றி இதுபோல்தான்
ஓசை செய்யும். ஆஹாஹா !
என்னே அருமை ! அருமை!" யென
யாவரும் அவனைப் போற்றினரே.

திரும்பத் திரும்பக் கோமாளி
செய்தான் அந்த வித்தையினை.
"அருமை ! இதுபோல் செய்திடவே
யாரால் முடியும்?" என்றனரே.

இந்தக் காட்சியைக் கண்டதுமே,
எழுந்து வந்தான் முனியாண்டி.
வந்ததும் சபையில் இருந்தோரை
வணங்கி வார்த்தைகள் கூறினனே .

"பன்றி போலக் கத்தியதைப்
பார்த்தும் கேட்டும் மகிழ்ந்தீர்கள்.
இன்னும் நன்றாய்க் கத்திடவே
எனக்குத் தெரியும், நம்புங்கள்.

நன்றாய்ச் செய்து காட்டிடுவேன்.
நாளை இரவே நடத்திடலாம்"
என்றான். உடனே பிரபுவுமே
இணங்கினர். மறுநாள் நடத்திடவே.

மறுநாள் இரவு கொட்டகையில்,
மக்கள் நிறையக் கூடினரே.
நெருக்கம் அதிகம் ஆனதனுல்,
நின்றே பார்த்தனர் பலபேர்கள்.

முன்னுள் வந்த கோமாளி
முதலில் வந்தான் மேடையிலே.
கண்டதும் அவனைச் சபையோர்கள்
கைகள் தட்டி வாழ்த்தினரே.

பன்றி போலே அன்றும்அவன்
பார்த்தோர் முன்னுல் கத்திடவே,
ஒன்ருய் அனைவரும் அவனுக்கே
உற்சா கத்தினை ஊட்டினரே.

அவனது வித்தை முடிந்ததுமே,
ஆரம் பித்தான் முனியாண்டி.
எவரும் அவனைப் போற்ருமல்
ஏளனம் அதிகம் செய்தனரே.

போர்வை ஒன்றை உடல்மீது
போர்த்திய படியே முனியாண்டி,
பார்வை யாளரின் முன்பாகப்
பன்றி போலக் குனிந்தனனே.

குனிந்து 'ஈக்பீக், ஈக்' எனவே
குரலை எழுப்பினன். எழுப்பியதும்,
"மனிதன் சத்தம் போடுதல்போல்
மடையன் இவனும் போடுகிருன்.

பன்றி இதுபோல் கத்தாது.
பார்ப்போர் தம்மை ஏய்க்கின்ருன்"
என்ருர் சிலபேர். மற்றவரும்
ஏளன மாகப் பேசினரே.

"கோமா ளியினைத் தோற்கடிக்கக்
கொஞ்சமும் முடியா" தென்றிடவே,
"ஆமாம், ஆமாம்" என்றுடனே
அனைவரும் கூச்சல் போட்டனரே.

ஃ ஃ ஃ

சத்தம் கேட்டும் முனியாண்டி
சற்றும் தயக்கம் இல்லாமல்
வித்தை காட்டினன். ஆனலும்,
மிகவும் கூச்சல் கேட்டதுவே.

கையைத் தட்டி அனைவருமே
கலகம் செய்தனர். முனியாண்டி,
"ஐயா, சபையில் இருப்பவரே,
அமைதி யுடனே கேளுங்கள்"

என்றே கூறிப் போர்வைதனை
எடுத்தான். உடனே கக்கத்தில்
பன்றி ஒன்று இருப்பதனைப்
பார்த்தனர் சபையில் இருந்தவர்கள்!

பன்றியைக் கையில் எடுத்தனனே;
பலரும் பார்க்கப் பிடித்தனனே;
"நன்றாய்க் கேட்பீர், சபையோரே,
நானிப் பொழுது கூறுவதை.

உடைக்குள் இந்தப் பன்றியையே
ஒளித்து வைத்தேன். இதன்காதைப்
பிடித்துத் திருகி விட்டதனால்,
'பீக்பீக்' என்று கத்தியதே.

உண்மைப் பன்றி கத்துகிற
ஓசை தன்னை உணராமல்,
கண்ணை மூடித் தீர்ப்பளித்த
கனதன வான்களே, பாருங்கள்.

இப்பொழு தாயினும் கூறுங்கள்.
இதனைக் காட்டிலும் நன்றாக
எப்படி மனிதன் கத்திடுவான்?
எண்ணிப் பார்ப்பீர், சபையோரே.

தீர யோசனை செய்யாமல்
　　தீர்ப்புக் கூறும் நண்பர்களே,
ஆர அமர யோசித்தே
　　அளிப்பீர் தீர்ப்பை இனியேனும்.''

முனியன் இப்படிக் கூறியதும்,
　　மிகவும் வெட்கம் கொண்டதனால்,
குனிந்தனர், சபையில் இருந்தோர்கள்;
　　குற்றம் தன்னை உணர்ந்தார்கள்.





# நரிக்குத் தண்டனை!

பளிங்குக் கோலிக் குண்டு போலப்
பளப ளக்கும் திராட்சைகள்
பழுத்துக் குலுங்கும் தோட்டம் தன்னைப்
பார்த்து நரிகள் சென்றன.

அந்தத் தோட்டம் தன்னில் சென்று
அட்ட காசம் செய்கையில்,
வந்து சேர்ந்தார் தோட்டம் வைத்து
வளர்த்த மனிதர் அவ்விடம்.

மெத்த கோபம் கொண்டு அவற்றை
விரட்டிப் பிடிக்க முயன்றனர்.
எத்தி விட்டு நரிகள் யாவும்
இங்கு மங்கும் ஓடின.

தினமும் காலையில் அவர்தலையில்
தெரிந்திடும் நரைமயிர் சிலவற்றை

'வெடுக்கு வெடுக்'கெனப் பிடுங்கினளே.
வேதனை யால்அவர் குதித்தனரே!

∴ ∴ ∴

மூத்தவள் மட்டும் சளைத்தவளா?
மும்முர மாக எண்ணினளே:

"எனது தலையில் பெரும்பகுதி
ஏற்கென வேதான் நரைத்துளதே.

என்றன் கணவரின் தலையுடனே
எனது தலையைப் பார்ப்பவர்கள்,

'வாலிப ரான கணவர்க்கு
வாய்த்தனள் நரைத்த கிழவி'யென

என்னைக் கேலி செய்திடுவர்.
இதற்கொரு வேலை செய்திடலாம்''

என்றே எண்ணினள். அதன்படியே
எழுந்ததும் தினமும் அவர்தலையில்

கறுப்பாய் உள்ள மயிர்களையே
கருத்துடன் அகற்றிட லாயினளே.

தலையில் ஒருமயிர் பிடுங்கிடினும்
தாங்கிட நம்மால் முடிகிறதோ?

எப்படி அற்புத சாமியுமே
இதனைப் பொறுத்தனர்? யானறியேன்;

தினம்தினம் மனைவியர் இருவருமே
சிலசில மயிர்களை அகற்றியதால்

குறைந்தன; குறைந்தன; வெகுவிரையில்
மறைந்தன தலைமயிர் யாவையுமே!

கத்திகள் எவையும் இல்லாமல்
கைத்திறம் ஒன்றே துணையாக

மொட்டை அடித்தனர் அவர்தலையை,
மூத்தவள், இளையவள் இருவருமே!

'சீப்பும் எண்ணெயும் இனிவேண்டா.
சிக்கன மாக வாழ்ந்திடலாம்'

என்றே அற்புத சாமியுமே
எண்ணிட வில்லை, அச்சமயம்!

"இருவரை மணந்தேன். ஆதலினால்,
என்றன் தலையும், ஐயையோ!

பாலை வனமாய்ப் போனதுவே!
பட்டது போதும்" என்றனரே!


சபையோர் தீர்ப்பு!

பிரபு ஒருவர் தம்ஊரில்
பெரிய கொட்டகை கட்டிஅதில்
இரவில் காட்சிகள் நடத்திடவே
ஏற்பா டெல்லாம் செய்தனரே.

அற்புத மான வித்தைகளை
அங்கே காட்டிடும் அனைவர்க்கும்
பற்பல பொருளை அப்பிரபு
பரிசாய்க் கொடுத்தனர் நித்தமுமே.

கட்டணம் எதுவும் வாங்காமல்
காட்சிக ளெல்லாம் காட்டியதால்,
கொட்டகை நிறைய மக்களுமே
கூடினர் தினமும் இரவினிலே.

∴ ∴ ∴

ஒருநாள் மேடையில் கோமாளி
ஒருவன் வந்து நின்றனனே.
"அரிய பெரிய வித்தையெலாம்
அடியேன் செய்வேன் ; கண்டிடுவீர்.

பன்றி போலக் கத்திடுவேன் ;
பார்த்தே அதிசயம் அடைவீர்கள்"
என்றே கூறிக் குனிந்தனனே ;
'ஈக்பீக் ஈக்' எனக் கத்தினனே.



2994—2

“உண்மைப் பன்றி இதுபோல்தான்
ஓசை செய்யும். ஆஹாஹா!
என்னே அருமை! அருமை!”யென
யாவரும் அவனைப் போற்றினரே.

திரும்பத் திரும்பக் கோமாளி
செய்தான் அந்த வித்தையினை.
“அருமை! இதுபோல் செய்திடவே
யாரால் முடியும்?” என்றனரே.

இந்தக் காட்சியைக் கண்டதுமே,
எழுந்து வந்தான் முனியாண்டி.
வந்ததும் சபையில் இருந்தோரை
வணங்கி வார்த்தைகள் கூறினனே.

“பன்றி போலக் கத்தியதைப்
பார்த்தும் கேட்டும் மகிழ்ந்தீர்கள்.
இன்னும் நன்றாய்க் கத்திடவே
எனக்குத் தெரியும், நம்புங்கள்.

நன்றாய்ச் செய்து காட்டிடுவேன்.
நாளை இரவே நடத்திடலாம்”
என்றான். உடனே பிரபுவுமே
இணங்கினர். மறுநாள் நடத்திடவே.

மறுநாள் இரவு கொட்டகையில்,
மக்கள் நிறையக் கூடினரே.
நெருக்கம் அதிகம் ஆனதனுல்,
நின்றே பார்த்தனர் பலபேர்கள்.

முன்னுள் வந்த கோமாளி
முதலில் வந்தான் மேடையிலே.
கண்டதும் அவனைச் சபையோர்கள்
கைகள் தட்டி வாழ்த்தினரே.

பன்றி போலே அன்றும்அவன்
பார்த்தோர் முன்னுல் கத்திடவே,
ஒன்ருய் அனைவரும் அவனுக்கே
உற்சா கத்தினை ஊட்டினரே.

அவனது வித்தை முடிந்ததுமே,
ஆரம் பித்தான் முனியாண்டி.
எவரும் அவனைப் போற்ருமல்
ஏளனம் அதிகம் செய்தனரே.

போர்வை ஒன்றை உடல்மீது
போர்த்திய படியே முனியாண்டி,
பார்வை யாளரின் முன்பாகப்
பன்றி போலக் குனிந்தனனே.

குனிந்து 'ஈக்பீக், ஈக்' எனவே
குரலை எழுப்பினன். எழுப்பியதும்,
"மனிதன் சத்தம் போடுதல்போல்
மடையன் இவனும் போடுகிறான்.

பன்றி இதுபோல் கத்தாது.
பார்ப்போர் தம்மை ஏய்க்கின்றான்"
என்றார் சிலபேர். மற்றவரும்
ஏளன மாகப் பேசினரே.

"கோமா ளியினைத் தோற்கடிக்கக்
கொஞ்சமும் முடியா" தென்றிடவே,
"ஆமாம், ஆமாம்" என்றுடனே
அனைவரும் கூச்சல் போட்டனரே.

ஃ ஃ ஃ

சத்தம் கேட்டும் முனியாண்டி
சற்றும் தயக்கம் இல்லாமல்
வித்தை காட்டினன். ஆனாலும்,
மிகவும் கூச்சல் கேட்டதுவே.

கையைத் தட்டி அனைவருமே
கலகம் செய்தனர். முனியாண்டி,
"ஐயா, சபையில் இருப்பவரே,
அமைதி யுடனே கேளுங்கள்"

என்றே கூறிப் போர்வைதனை
எடுத்தான். உடனே கக்கத்தில்
பன்றி ஒன்று இருப்பதனைப்
பார்த்தனர் சபையில் இருந்தவர்கள்!

பன்றியைக் கையில் எடுத்தனனே;
பலரும் பார்க்கப் பிடித்தனனே;
"நன்றாய்க் கேட்பீர், சபையோரே,
நானிப் பொழுது கூறுவதை.

உடைக்குள் இந்தப் பன்றியையே
ஒளித்து வைத்தேன். இதன்காதைப்
பிடித்துத் திருகி விட்டதனால்,
'பீக்பீக்' என்று கத்தியதே.

உண்மைப் பன்றி கத்துகிற
ஓசை தன்னை உணராமல்,
கண்ணை மூடித் தீர்ப்பளித்த
கனதன வான்களே, பாருங்கள்.

இப்பொழு தாயினும் கூறுங்கள்.
இதனைக் காட்டிலும் நன்றாக
எப்படி மனிதன் கத்திடுவான்?
எண்ணிப் பார்ப்பீர், சபையோரே.

தீர யோசனை செய்யாமல்
தீர்ப்புக் கூறும் நண்பர்களே,
ஆர அமர யோசித்தே
அளிப்பீர் தீர்ப்பை இனியேனும்.''

முனியன் இப்படிக் கூறியதும்,
மிகவும் வெட்கம் கொண்டதனால்,
குனிந்தனர், சபையில் இருந்தோர்கள்;
குற்றம் தன்னை உணர்ந்தார்கள்.





# நரிக்குத் தண்டனை!

பளிங்குக் கோலிக் குண்டு போலப்
பளப ளக்கும் திராட்சைகள்
பழுத்துக் குலுங்கும் தோட்டம் தன்னைப்
பார்த்து நரிகள் சென்றன.

அந்தத் தோட்டம் தன்னில் சென்று
அட்ட காசம் செய்கையில்,
வந்து சேர்ந்தார் தோட்டம் வைத்து
வளர்த்த மனிதர் அவ்விடம்.

மெத்த கோபம் கொண்டு அவற்றை
விரட்டிப் பிடிக்க முயன்றனர்.
எத்தி விட்டு நரிகள் யாவும்
இங்கு மங்கும் ஓடின.

அந்த மனிதர் நரிகள் தம்மை
அயர்ந்தி டாமல் விரட்டியே
சென்று அவற்றில் ஒன்றை மட்டும்
சிரமப் பட்டுப் பிடித்தனர்.

பிடித்த நரியின் வாலில் துணியைப்
பிரிய மோடு சுற்றினர்;
எடுத்து வந்து துணியின் மீது
எண்ணெய் தன்னை ஊற்றினர்.

தீங்கு செய்த நரியின் வாலில்
தீயை வைத்து, முதுகிலே
ஓங்கி ஓங்கித் தடியி னாலே
உதைத்து விரட்ட லாயினர்.

பதறிக் கொண்டே ஊளை யிட்டுப்
பாய்ந்து ஓடும் நரியுமே
கதிர்கள் முற்றி யிருந்த வயலைக்
கடந்து செல்ல நேர்ந்தது.

நரியின் வாலில் வைத்த தீயும்
நன்கு பற்றி எரிந்ததால்,
அருமை யான கதிர்கள் யாவும்
ஐயோ, பற்றிக் கொண்டன!

சொந்த மாக அவருக் குள்ள
ஐந்து காணி நிலத்திலும்
நன்கு முற்றி யிருந்த கதிர்கள்
நாச மாகப் போயின !

"ஆத்தி ரத்தில், அவச ரத்தில்
அறிவி ழந்தேன். ஆதலால்,
நேத்தி ரம்போல் காத்து வந்த
நேர்த்தி யான பயிரெலாம்

எரிந்து சாம்பல் ஆனதய்யோ !
என்றன் வயிறும் பற்றியே
எரியும் விதத்தை எவரி டத்தில்
எடுத்து ரைப்பேன் !" என்றனர்.




அழகுக் கொம்புகள்

கலைமான் ஒன்று காட்டினிலே,
கடுமை யான வெய்யிலிலே,
அலைந்து சுற்றித் திரிந்ததுவே;
அதிகத் தாகம் கொண்டதுவே.

அருகில் இருந்த ஓடைதனை
அடைந்தது, தண்ணீர் அருந்திடவே.
உருவம் நீரில் தெரிந்திடவே,
உற்றே அதனைப் பார்த்ததுவே.

தண்ணீர் தன்னில் அழகுடைய
தனது கொம்புகள் தெரிந்திடவே,
"என்னே அழகு, ஆஹாஹா!
எனது கொம்புகள்!" என்றதுவே.

கொண்டது பெருமை; அப்பொழுதே
கோபம் வந்தது கால்களின்மேல்.
கண்டவர் இகழ அழகின்றிக்
கால்கள் நான்கும் உள்ளனவே!

"ஈசன் தந்தான் அழகுடைய
இரண்டு கொம்புகள். ஆயினுமே,
மோச மான கால்களினால்
மிகவும் கேவலம் ஆகிறதே!"



# வெள்ளைக் காக்கை

இரையைத் தேடிக் காகம் ஒன்று
சுற்றி வந்தது.
எங்கள் வீட்டுக் கூரை மீது
வந்த மர்ந்தது.
தரையில் கொட்டிக் கிடந்த நல்ல
தானி யங்களைத்
தடையில் லாமல் புறாக்கள் கூடி
மேயக் கண்டது.

'கள்ளத் தனமாய்ப் புறாக்க ளோடு
சேர்ந்து நாமுமே,
களித்து இரையைத் தின்ன வேண்டும்'
எனநி னைத்தது;




இரையைத் தேடிக் காகம் ஒன்று
சுற்றி வந்தது.
எங்கள் வீட்டுக் கூரை மீது
வந்தமர்ந்தது.
தரையில் கொட்டிக் கிடந்த நல்ல
தானியங்களைத்
தடையில்லாமல் புறாக்கள் கூடி
மேயக் கண்டது.

'கள்ளத் தனமாய்ப் புறாக்க ளோடு
சேர்ந்து நாமுமே,
களித்து இரையைத் தின்ன வேண்டும்'
எனநினைத்தது;

அப்போ தந்தக் காகக் கூட்டம்
என்ன செய்தது ?
ஆவ லோடு 'வருக', 'வருக'
என்ற ழைத்ததா ?

இல்லை, இல்லை. வெள்ளை பூசி
வந்த காக்கையை
ஏதோ பறவை என்றே அவையும்
எண்ணி விட்டன !
தொல்லை கொடுக்கும் பறவை யென்று
கருதி விட்டதால்,
துரத்தித் துரத்திக் கோப மாக
விரட்டி அடித்தன.

பிறரை ஏய்க்க நினைத்துக் காகம்
வேஷம் போட்டது.
பிறந்த இனத்துப் பறவை கூடத்
துரத்தி அடித்தது.
பறந்து பறந்து இங்கும் அங்கும்
அலைந்து திரிந்தது.
பாவம், பின்னர் அந்தக் காகம்
என்ன ஆனதோ !



# ஜாடித் தேன்

ஜாடித் தேனும் தரையிலே
தவறிக் கொட்டிக் கிடந்தது.
நாடி அதனை ஈக்களும்
கூடி வந்து மொய்த்தன.

தேனின் மீது அமர்ந்தன;
திருப்தி யாகக் குடித்தன.
தேனைக் குடிக்கும் ஆவலில்
சிந்தை மறந்து போயின.

அதிக நேரம் அப்படி
அமர்ந்த தாலே தேனுமே,
பதிய வைத்த கால்களைப்
பசைபோல் பற்றிக் கொண்டது.

எழுந்து பறக்க முயன்றன;
இறகை அடித்துப் பார்த்தன
முழுதும் தோல்வி! ஆதலால்,
மூச்சுத் திணறலானது.

உடம்பு முழுதும் தேனுமே
ஒட்டிக் கொண்டு ஈக்களை
உடும்புப் பிடியாய்ப் பிடித்தது;
உயிரை வாட்டி வதைத்தது.

சிக்கிக் கொண்ட ஈக்களோ
செய்வ தேதும் இன்றியே
மிக்க சிரமப் பட்டன.
மூச்சு நிற்கும் வேளையில்,

"ஆசை அதிகம் கொண்டதால்,
ஐயோ! இன்று நாமெலாம்
மோசம் போனோம்!" என்றன;
மிகவும் வருந்தி இறந்தன!



# வித்தியாசம்



வெள்ளை முயல் வேக மாக
    ஓட லானது.
வேட்டை நாயும் அதைத் துரத்தி
    விரட்ட லானது.
துள்ளித் துள்ளி அந்த முயல்
    அதிக தூரத்தைத்
துரித மாகக் கடந்து சென்று
    மறைய லானது.

முயலைத் தொடர்ந்த வேட்டை நாயும்
    அயர்ந்து போனது;
மூச்சுத் திணறி ஓரி டத்தில்
    அமர்ந்து விட்டது.

வயலில் ஆடு மேய்த்த சிறுவன்
இதனைக் கண்டனன்;
வந்து வேட்டை நாயி டத்தில்
கேட்க லாயினன்:

"சின்னஞ் சிறிய முயலைப் பிடிக்க
முடிய வில்லையே!
'தீரன், வேட்டை வீரன்' என்று
பெருமை கொள்வதேன்?
என்ன கார ணத்தி னாலே
தோல்வி வந்ததோ?"
என்று கேட்க, வேட்டை நாயும்
பதிலு ரைத்தது:-

"எனக்கும் அதற்கும் உள்ள தான
வித்தி யாசத்தை
எளிதில் அறிந்து கொள்ள லாமே!
தெரிய வில்லையா?
உணவுக் காகத் தொடர்ந்து சென்ற
எனது ஓட்டத்தால்,
உயிரைக் காக்க ஓடும் முயலை
வெல்ல முடியுமோ?"




சிட்டுக் குருவி ஒருவீட்டின்
சிறிய அறைக்குள் மெதுவாக
எட்டிப் பார்த்தது. அங்கொருவர்
எண்ணிப் பார்த்தார் காசுகளை.

காசுகள் யாவும் பொன்னாகும்!
கருத்துடன் அவற்றைத் தினம்தினமும்
ஓசையில் லாமல் எண்ணிடுவார்.
ஒருமுறை யல்ல; பலமுறைகள்!

'காசே கடவுள் எனக்கருதும்
கருமி, கருமி, கருமியடா.
மோசக் காரர்!' என்றவரை
வெறுப்புடன் ஊரார் பேசிடுவார்.

அந்தக் கருமி சிறுபொழுது
அயர்ந்திடக் குருவி பாய்ந்தோடி
வந்தொரு காசைத் தூக்கியது;
வைத்தது அங்கொரு பொந்தினிலே.

கண்டனர் கருமி; பற்களையே
கடித்தனர்; கோபம் மிகமிகவே
கொண்டனர். "சிட்டே, உன்செயலால்
கொஞ்சமும் உனக்குப் பயனுண்டோ?

திருடிய காசைத் தின்பாயோ?
செலவிடும் வழிதான் தெரிந்திடுமோ?
திருகியே கொல்வேன் உன்கழுத்தை.
சீச்சீ, காசைக கொடு" என்றார்.

"ஐயா, உலகம் அறிந்தவரே!
அறிவுரை கூறும் பெரியவரே!
மெய்யைச் சிறிதும் உணராமல்
வீணாய்க் கோபம் கொள்ளுவதேன்?

தேவையும் பயனும் தெரியாமல்
திருடினேன் எனவே கூறுகிறீர்.
தேவையும் பயனும் தெரிந்தும்நீர்
செய்திடும் வேலை தெரியாதோ?

எவர்க்கும் உதவி செய்யாமல்,
ஏதும் இன்பம் அடையாமல்,
பவுனைச் சேர்த்துத் தினம்தினமும்
பார்த்துக் காத்து வருகின்றீர்.

ஒற்றைக் காசை நானெடுத்து
ஒளித்தது மிகமிக மிகப்பெரிய
குற்றம் என்றீர்; என்னையுமே
கொல்லுவ தாக மிரட்டுகிறீர்!

ஒற்றைக் காசை ஒளித்ததற்கே
உயிரை வாங்குவ தெனச்சொன்னால்,
இத்தனை காசையும் ஒளிப்பவர்க்கே
எப்படித் தண்டனை கொடுப்பதுவோ!''

என்றே கூறிப் பொற்காசை
எறிந்தது; குருவி பறந்ததுவே!
ஒன்றும் கூறிட முடியாமல்
உயரப் பார்த்தனர் கருமியுமே!




சேவலின் கர்வம்

கொண்டை வளர்ந்தசேவல்—இரண்டு
கோபமாய் ஒன்றை யொன்று
சண்டைக் கிழுத்தனவே—தங்கள்
சக்தியைக் காட்டிடவே.

இரண்டிலே சேவலொன்று-வெற்றி
எய்திட, மற்ற ஒன்று
மிரண்டது. மூலையிலே சென்று
வெட்கியே நின்றதுவே.

வெற்றி அடைந்தசேவல்-கூரை
மீதினில் ஏறி நின்று,
சுற்றிலும் கேட்டிடவே-கூவித்
தொண்டையைக் காட்டியதே!

கர்வம் மிகுந்தசேவல்-குரலைக்
கழுகொன்று கேட்டிடவே,
'விர்'ரெனக் கூரைதன்னை-நோக்கி
வேகமாய்ப் பாய்ந்ததுவே!

சேவலைக் கால்களினல்—தூக்கிச்
சென்றது விண்ண திலே.
சாவது நிச்சயந்தான்-சேவல்
தன்னுடை கர்வத்தினல்!




அலைகள் இல்லாக் குளத்திலே
அதிக மீன்கள் பிடிக்கவே
வலையை இருவர் விரித்தனர்;
வளைத்து மீனைப் பிடித்தனர்.

வலையில் அதிக மாகவே
வந்து விழுந்த மீன்களை,
கலயம் தன்னில் நிரப்பினர்;
கையில் எடுத்துச் சென்றனர்.

அருகில் இருந்த மரத்திலே
அமர்ந்தி ருந்த குரங்குமே
'குறுகு' றென்று இதனையே
கூர்ந்து பார்க்க லானது.

மனிதர் இருவர் தலைகளும்
மறைந்த வுடனே, வேகமாய்க்
குனிந்த முதுகுக் குரங்குமே
குதித்தே ஓடி வந்தது;

கரையில் கிடந்த வலைதனைக்
கையில் எடுத்துக் கொண்டது;
விரைவில் குளத்தில் குதித்தது;
வீசி வலையை விரித்தது.

வலையில் மீன்கள் எதுவுமே
வந்து சிக்கு முன்னரே,
தலையும் காலும் சிக்கியே
தவித்த தந்தக் குரங்குமே!

தகுந்த உதவி இல்லையே!
தப்ப வழியும் இல்லையே!
மிகுந்த முயற்சி செய்தது;
வீண்தான் என்றே அறிந்தது!

“குளத்தில் வலையை விரிக்கவும்,
குதிக்கும் மீனைப் பிடிக்கவும்
பழக்க மில்லா என்னையே
பாழும் ஆசை கெடுத்ததே!

மந்தி யாகப் பிறந்தநான்
மனித னாக நடித்ததால்,
இந்தக் குளத்தில் சாகிறேன்.
இதுஎன் மடமை” என்றது.




பள்ளி தன்னில் நண்பனின்
பாடப் புத்த கத்தினை
கள்ளத் தனமாய் எடுத்துமே
கறுப்பன் வீடு வந்தனன்.

திருடி வந்த பையனைத்
திருத்தும் நோக்கம் இன்றியே,
பெருமை கொள்ள லாயினள்,
பெற்ற தாயும் மகிழ்வுடன்.

எடுத்து வந்தான் மறுமுறை
இன்னும் ஒருவன் போர்வையை.
தடுத்துத் திருத்தி டாமலே
தாயார் அன்றும் மெச்சினள்.

திரும்பத் திரும்பக் கறுப்பனும்
திருடித் திருடி மெத்தவும்
பெரிய திருடன் ஆயினன்.
பெயரைக் கேட்டே நடுங்கினர்!

கொள்ளைக் காரக் கறுப்பனால்
கொடுமை பெருக லானது.
கள்ளன் அவனைத் தேடியே
காவலர்கள் பிடித்தனர்,

பிடித்து அவனைத் தூக்கிலே
போட முடிவு செய்தனர்.
துடித்து அன்னை அலறினள்,
துக்கச் செய்தி கேட்டதும்.

தூக்குப் போடும் தினத்திலே
சூழ்ந்து மக்கள் கூடினர்.
ஏக்கம் கொண்ட தாயுமே
இதயம் துடிக்க வந்தனள்.

"அன்னை யோடு பேசவே
ஐந்து நிமிஷம் வேண்டுமே"
என்று கறுப்பன் கெஞ்சவே
இசைந்தார், அங்கே உள்ளவர்.

கறுப்பன் தாயை நெருங்கினன்;
காதைக் கடித்து விட்டனன்!
அறுந்த காதுத் தாயிடம்
அவன் உரைக்க லாயினன்:

"சின்னஞ் சிறிய வயதிலே
திருடி வந்தேன் புத்தகம்.
என்னை அன்று போற்றினாய்.
இடித்துத் திருத்த வில்லைநீ.

கெட்ட எனது செய்கையைக்
கேட்டாய், இந்தக் காதினால்.
தட்டிச் சொல்ல வில்லைநீ.
தவறைத் திருத்த வில்லைநீ.

திருட்டுத் தொழிலை என்னுடன்
சேர்ந்து வளர விட்டதால்,
அருமை மானம் போனதே!
ஐயோ, சாகப் போகிறேன்!"



# கழுதை நிழல்



அரிசி பருப்பு விற்க வேண்டி
வணிகன் ஒருவனும்
அதிக தூரம் தன்னி லுள்ள
ஊரை நோக்கியே,
பெரிய கழுதை ஒன்றில் சுமையை
ஏற்றிச் சென்றனன்;
பின்னால் அதனைத் தொடர்ந்த வாறே
போக லாயினன்.

அந்தக் கழுதை வணிக னுக்கே
சொந்த மென்று நீ
அவச ரத்தில் எண்ணி டாதே!
கதையைக் கேட்டிடு.
சொந்த மில்லை! வாட கைக்கே
அதைய மர்த்தினன்.
தொடர்ந்து கழுதைக் கார முனியன்
ஓட்டி வந்தனன்.

பட்டப் பகலில் சுட்டுப் பொசுக்கும்
வெய்யில் தன்னிலே
பாதித் தூரம் சென்ற வணிகன்
களைத்துப் போயினன்.
வெட்ட வெளியில் தங்கு தற்கு
நிழலில் லாததால்
வேறே என்ன செய்வ தென்றே
எண்ணிப் பார்த்தனன்.

கழுதை தன்னை அவ்வி டத்தே
நிறுத்தச் சொல்லினன்;
களைப்புத் தீரக் கழுதை நிழலில்
அமர லாயினன்.
கழுதைக் கார முனியன் இதனைக்
கண்டு கோபமாய்க்
கண்டிப் பான குரலில் உடனே
கூற லாயினன்:

''வாட கைக்குக் கழுதை ஒன்றை
மட்டுமே தந்தேன்.
வாட்ட சாட்ட மாக இதனின்
நிழலில் அமர்வதேன்?
கூட வேஇக் கழுதை நிழலைச்
சேர்த்தோ பேசினீர்?
கொடுக்க வேண்டும் நிழலுக் காகத்
தனியே வாடகை''

இதனைக் கேட்ட வணிகன் உடனே
எழுந்து கோபமாய்,
"என்ன சொன்னாய்? கழுதை யோடு
நிழலும் சேர்ந்ததே.
அதற்குத் தனியே செப்புக் காசும்
தருவேன் என்றோநீ
ஆசை கொண்டாய், மடையா!" என்றே
ஏச லாயினன்.

"நானோ மடையன்?" என்று கூறி
அந்த வணிகனை
நன்கு பிடித்துத் தள்ளி விட்டுக்
கழுதைக் காரனும்,
தானே அந்தக் கழுதை நிழலில்
அமர்ந்து கொண்டனன்.
தாங்கொ ணாத கோபத் தோடு
வணிகன் பாய்ந்தனன்.

கைக லந்து சண்டை அவர்கள்
போட லாயினர்.
கழுதை அந்தச் சமயம் பார்த்தே
ஓடி விட்டது!
'ஐயோ, கழுதை! கழுதை!' என்று
முனியன் கதறினன்.
'அடடா! சரக்குப்போச்சே!' என்று
வணிகன் அலறினன்!



2994—4


தந்திர மகிமை

காட்டின் நடுவே வயலிலே
கழுதை மேயக் கண்டதும்,
ஓட்டம் ஓட்ட மாகவே
ஓநாய் ஓடி வந்தது.

கண்ட வுடனே கழுதையும்
காலில் ஒன்றைத் தூக்கியே
நொண்டிக் கழுதை போலவே
நொண்டி, நொண்டி நடந்தது.

ஓநாய் அருகே வந்தது;
உற்றுக் காலைப் பார்த்தது.
"ஏனோ நொண்டி நடக்கிறீர்
என்றன் அருமை நண்பரே?"

என்று கேட்கக் கழுதையும்
எடுத்துக் கூற லானது:
"அன்பு கொண்ட நண்பரே,
அந்தக் கதையைக் கேட்டிடும்.

வேலி ஒன்றைத் தாண்டியே
வேக மாக வருகையில்,
காலில் நீண்ட முள்ளுமே
கத்தி போலப் பாய்ந்தது.

பாய்ந்த முள்ளும் என்னையே
படுத்தும் பாடு கொஞ்சமோ?
ஓய்ந்து போனேன். இன்னமும்,
உயிர்பி ழைத்து வாழ்வதோ ?

கொன்று என்னைத் தின்னுவீர்.
கோடி கோடிப் புண்ணியம்.
ஒன்று மட்டும் முன்னரே
உரைத்து விட்டுச் சாகிறேன்.

தின்னும் போது தொண்டையில்
சிக்கி டாதி ருக்கவே,
முன்ன தாக எனதுகால்
முள்ளை நீக்கும் நண்பரே !"

உண்மை என்று நம்பியே
ஓநாய் மகிழ்ச்சி கொண்டது ;
பின்னங் காலில் முள்ளையே
பிடுங்கி எடுக்கப் பார்த்தது.

உற்று ஓநாய் பார்க்கையில்
ஓங்கிக் கழுதை கால்களால்,
'பட்பட்' டென்று உதைத்தது;
பற்கள் உதிரச் செய்தது!

முன்னம் பற்கள் போனதும்,
மூர்ச்சை யான எதிரியைத்
தன்னந் தனியே விட்டுமே
தாவிக் கழுதை சென்றது!

தந்தி ரத்தின் மகிமையால்
தப்பிப் பிழைத்த கதைதனை
சொந்தக் காரர் கேட்டிடச்
சொல்லிச் சொல்லிச் சிரித்ததே!



# தண்டனை



'கொக்கரக் கோ'வெனக் காலையிலே
கூவிடும் சேவல். அதுகேட்டு,

என்றன் அம்மா எழுந்திடுவாள்.
எழுந்ததும் அடுப்பங் கரைதனிலே,

உறங்கும் வேலைக் காரியையே
உடலைத் தட்டி எழுப்பிடுவாள்.

வேலைக் காரி சோம்பேறி.
மிகவும் அலுத்துக் கொண்டிடுவாள்.

தினம்தினம் இப்படி எழுவதுமே
சிரமமாக இருந்ததனால்,

திட்டம் ஒன்று தீட்டினளே;
செய்கையில் காட்ட முயன்றனளே.

இரவில் எவரும் அறியாமல்
எடுத்துச் சென்ருள் சேவலேயே.

கழுத்தைத் திருகிக் கொன்றனளே.
களிப்புடன் வந்து படுத்தனளே.

செத்துப் போனது சேவல்எனத்
தெரிந்தது, மறுநாட் காலையிலே.

ஆயினும் எப்படி இறந்ததென
அம்மா அறியாள்; வருந்தினளே,

'இனிமேல் சேவல் கூவியபின்
எழுவது என்பது முடியாது.

அதனுல், தினமும் நானே தான்
அதிகாலையிலே விழித்தெழுந்து,

வேலேக் காரியை எழுப்பிடவே
வேண்டும்' என்று எண்ணினளே.

சேவல் இல்லே. ஆதலினுல்,
தெரிந்திட வில்லே, நேரமுமே.

விடிந்தது என்ற நினேப்புடனே
வேலேக் காரியை என்அம்மா,

நடுஇர வதிலே எழுப்பிடுவாள்;
நன்ருய் வேலை வாங்கிடுவாள்!

இப்படித் தினந்தினம் நடுஇரவில்
எழுப்பிய தாலே மிகமிகவே

வருந்தினள், வேலைக் காரியுமே.
வாட்டங் கொண்டு கூறினளே:

"சோம்பல் ஓட்டிக் காலையிலே
சுறுசுறுப் பினையே தந்திடுமாம்

சேவல் தன்னைக் கொன்றேன் நான்.
சிறிதும் யோசனை இல்லாமல்.

சேவல் இருக்கையில் எஜமானி
தினமும் காலையில் எழுப்பிடுவாள்.

சேவல் இறந்தபின் நடுஇரவே
சித்திர வதைதான் செய்கின்ருள்.

ஐயோ! என்றன் துயரமதை
யாரிடம் கூறி அழுதிடுவேன்?

சேவலைக் கொன்ற பெரும்பழிதான்
தீர்ந்திடும் நாளும் எந்நாளோ?"


பெண் கேட்ட
சிங்கம்
அருண்

விறகு வெட்டி மரத்தினை
வெட்டிக் கொண்டே இருந்தனன்.
அருகில் சிங்கம் வந்தது;
அவனைப் பார்த்து விட்டது !

சிங்கம் அருகில் வருவது
தெரிந்த வுடனே அவனுமே
அங்கி ருந்து வேகமாய்
அலறிக் கொண்டே ஓடினன்.

சிங்கம் அவனைத் தொடர்ந்துமே
சென்று பிடித்து விட்டது !
'எங்கே ஓடப் பார்க்கிறாய்?'
என்று மிரட்டிக் கேட்டது.

'மிருக ராஜ சிங்கமே,
மிகவும் கெஞ்சிக் கேட்கிறேன்;
இரக்கம் காட்டி விட்டிடு'
என்றே அவனும் வேண்டினன்.

'உன்னை விட்டு விடுகிறேன்.
ஒன்று மட்டும் செய்திடு.
இன்றே உனது மகளை நீ
எனக்கு மணந்து கொடுத்திடு.'

இந்த வார்த்தை கேட்டதும்
ஏதோ அவனும் எண்ணினன்;
தந்தி ரத்தின் உதவியால்
தப்பிச் செல்லக் கருதினன்.

'மன்னர் சிங்கம் அவர்களின்
மாம ஞகும் பாக்கியம்
இன்று நானும் பெறுவதே
முன்பு செய்த புண்ணியம்.

'மன்னர் சிங்கம் அவர்களின்
மனைவி யாகப் போகிருய்'
என்று நானும் சொன்னதும்
எனது மகளும் மகிழுவாள்.

ஒன்று மட்டும் கேட்டிடு,
உயர்ந்த மிருக ராஜனே!
என்றன் மகளோ பயந்தவள்;
எதற்கும் நடுங்கும் இயல்பினள்.

கூர்மை யான பற்களும்
குத்திக் கிழிக்கும் நகங்களும்
பார்த்த வுடனே நடுங்குவாள்:
பயந்து மணக்கத் தயங்குவாள்.

ஆதலாலே அவற்றினை
அகற்றி விட்டு, அவளிடம்
போதல் மிகவும் நலம்' எனப்
புகன்றான் விறகு வெட்டியும்.

'உண்மை, உண்மை, உண்மைதான்.
உடனே பற்கள் நகங்களை
என்னை விட்டுப் பிரித்திடு;
எனது ஆசை தீர்த்திடு.'

சிங்கம் இதனைச் சொன்னதும்
சிறிதும் தயக்கம் இன்றியே
அங்கே அடுத்த நிமிஷமே
அந்த விறகு வெட்டியும்,

நகங்கள், பற்கள் யாவையும்
நன்கு பிடுங்கி விட்டனன்.
மிகவும் வலித்த போதிலும்
வெளியில் சிங்கம் சொல்லுமோ?

பிறகு சிங்க ராஜனைப்
பிரியங் காட்டித் தன்னுடன்
விறகு வெட்டி அழைத்தனன்;
வீடு நோக்கிச் சென்றனர்.

வீட்டுக் குள்ளே சென்றவன்
மிகவும் பெரிய உலக்கையைக்
காட்டிக் கொண்டே திரும்பினன் ;
கையை ஓங்க லாயினன்.

'பல்லும் நகமும் போனபின்
பயமு றுத்த முடியுமோ ?
நல்ல பிள்ளை போலநீ
நடையைக் கட்டு ; சீக்கிரம் !

கண்டாய் எனது கையிலே
கனத்த உலக்கை இருப்பதை ;
மண்டை பிளந்து போய்விடும்.
வழியைப் பார்த்து ஓடிடு !'

என்ற விறகு வெட்டியை
ஏது சிங்கம் செய்திடும் ?
ஒன்றும் கூறி டாமலே
ஓட்டம் பிடிக்க லானது !

பெண்ணைக் கேட்க வந்தவர்
பேச்சு மூச்சு இன்றியே
கண்ணை மூடி ஓடிடும்
காட்சி நல்ல காட்சிதான் !



# வல்லவனுக்கு வல்லவன்

சிங்க ராஜன் தலைநிமிர்ந்து
செல்லுகின்ற வேளையில்
எங்கிருந்தோ தேனீ ஒன்று
எதிரில் வந்து சேர்ந்தது.

‘சின்னஞ் சிறிய ஜந்து வேநீ
சிறிதும் அச்சம் இன்றியே
என்றன் எதிரில் வருகிறாயே !’
என்று சிங்கம் கேட்டது.

‘தீர னென்றும், வீர னென்றும்
செப்பித் திரியும் சிங்கமே,
போரில் என்னை வெல்லுதற்குப்
போதும் சக்தி உள்ளதோ ?

கூர்மை யான நகங்க ளோடு
கொடிய பற்கள் இருப்பினும்,
சோர்ந்து கீழே வீழ வைப்பேன்.
சொல்லி விட்டே செய்கிறேன்'

என்று கூறிச் சிங்கந் தன்னை
எதிர்த்து மூக்குக் காதினுள்
சென்று மென்மைப் பகுதி யாவும்
நன்கு கொட்ட லானது.

கொட்டும் வலியைத் தாங் கிடாமல்
கோபம் கொண்ட சிங்கமும்
எட்டுத் திக்கும் கிடுகி டுக்க
இரைச்சல் போட லானது.

தேனீ சிறிதும் அஞ்சி டாமல்
திரும்பத் திரும்பக் கொட்டவே,
மேனி நடுங்கி, மூளை கலங்கி
வீழ்ந்த தந்தச் சிங்கமே!

சிங்க ராஜன் தன்னை வென்ற
செருக்கி னோடு தேனீயும்
அங்கு மிங்கும் மகிழ்ச்சி யோடு
ஆடிப் பாடித் திரிந்தது,

சிறிது நேரம் சென்ற தென்று
செப்பு தற்கு முன்னரே,
அருகில் இருந்த சிலந்தி வலையில்
ஐயோ, சிக்கிக் கொண்டதே !

பிழைத்துச் செல்ல எண்ணித் தேனீ
பின்னும் முன்னும் உடலினை
வளைத்துப் பார்த்துத் துடிதுடித்து
வாடி வருந்த லானது.

சிலந்தி, தனது வலையில் வந்து
சிக்கித் தவித்து மெத்தவும்
கலங்கி நிற்கும் தேனீ தன்னைக்
களித்துத் தின்று தீர்த்தது!

வல்ல வர்க்கும் வல்ல வர்கள்
வைய கத்தில் உண்டெனச்
சொல்லு முன்னர் தெரிந்து கொண்டீர்,
சுலப மாகக் கதையினால் !



# அடிமை வாழ்வு



கூட்டுக் குள்ளே அடைக்கப் பட்ட
பெண்பு ருவுமே
குஞ்சு நான்கு பிறந்த தென் று
மகிழ்ச்சி கொண்டதே !
வாட்டம் நீங்கி 'ஆஹா ! எனது
குடும்பம் பெருகுதே !
மகிழ்ச்சி ! மகிழ்ச்சி !' என்றே எண்ணிப்
பெருமை சொன்னதே.

பறந்து சென்ற காகம் ஒன் று
இதனைக் கேட்டதே.
பைய வந்து புருவி டத்தில்
கூற லானதே :
'பிறந்தி ருக்கும் குஞ்சு தன்னை
எண்ணி எண்ணியே
பெருமை கொள்வ தேன்உ னக்குப்
புத்தி இல்லையா ?



2994—5

கூட்டில் அடிமை போல இங்கே
வாழு கின்றநீ
குடும்பம் பெருகு தென்று கூறி
மகிழ்ச்சி கொள்வதேன் ?
வாட்டம் நீங்க வழியில் லாத
இந்தக் கூட்டிலே
வளரும் குடும்பம் அடிமை வாழ்வை
வளர்க்கும் குடும்பமே !'



# நல்ல பதில்!



சிங்கம், மனிதன் இருவரும்
    சேர்ந்து கொண்டு நண்பராய்
அங்கு மிங்கும் காட்டிலே
    அலைந்து திரிய லாயினர்.

'சிங்க மேஇவ் வுலகினில்
    தீரம் மிகவும் உடையவர்
எங்கள் மனித ரல்லவோ ?'
    என்று மனிதன் கேட்டனன்.

'தீரம் மிகுந்த மனிதனைச்
    சிங்கம் என்று புகழ்வதேன்?
வீரம் மிகவும் உடையவர்,
    வெற்றி பெறுவோர் நாங்களே.'

என்று சிங்கம் உரைத்தது,
இருவர் பேச்சும் வளர்ந்தது.
சென்ற வழியில் அழகிய
சிலையைக் காண நேர்ந்தது.

மடக்கிப் போட்டுச் சிங்கத்தை
மனிதன் ஒருவன் வீரமாய்
அடக்கி ஆளும் காட்சியை
அந்தச் சிலையில் கண்டனர்.

'பார்பார் இந்தச் சிலைதனை !
பார்க்கும் போதே தெரியுமே!
யார்தான் வீரம் மிகுந்தவர் ?'
என்றான் மனிதன். சிங்கமோ,

'சிலையைச் செய்து வைத்ததே
சிங்க மல்ல ; மனிதன்தான் !
சிலைகள் செய்யும் கலையெலாம்
தெரிந்தி ருந்தால் நாங்களும்,

மடக்கிப் போட்டு மனிதனை
மார்பில் கால்கள் ஊன்றியே
திடத்தைக் காட்டும் சிங்கத்தைச்
செய்து வைப்போம்' என்றதே !

# முன்யோசனை



இரண்டு தவளைகள் ஒருகுளத்தில்
இருந்து வாழ்ந்திடும் நாளையிலே
வறண்டது அக்குளம். தவளைகளும்
வாழ்ந்திட வேறிடம் தேடினவே.

தேடிச் சுற்றித் திரிகையிலே
தெரிந்தது பெரிய கிணறொன்று.
நாடிச் சென்றே அக்கிணற்றை
நன்றாய் உற்றுப் பார்த்தனவே.

'தண்ணீர் நிறைந்த இக்கிணற்றில்
தாவிக் குதிப்போம் இப்பொழுதே.
உண்ண உணவும், வாழ்ந்திடவே
உகந்த இடமும் பெற்றிடலாம்.'

இப்படி அவற்றில் ஒருதவளை
எடுத்துக் கூறிட, மற்ருென்று,
'அப்பனே, நீயும் சொல்வதுபோல்
அவசரப் பட்டால் பயனில்லை.

ஏரியும் குளமும் வற்றிவிடின்
எங்கே யாவது சென்றிடலாம்.
கூறிய உனது மொழிகேட்டுக்
குதித்தால் இந்தக் கிணற்றினிலே,

தண்ணீர் முழுதும் வற்றிவிடின்
தாவி வெளியில் வந்திடவே
எண்ணக் கூட முடியாதே !
இறப்பது நிச்சயம்' என்றதுவே.



# தேர்தல்



பறவைகள் மாநாடு கூட்டினவே. அங்குப்
பற்பல பறவைகள் வந்தனவே.
'சிறந்தநல் பறவையை அரசனென்றே நாங்கள்
தேர்ந்தெடுப் போ'மெனக் கூறினவே.

அரசர் பதவிக்குப் போட்டியிட்டே, அங்கு
ஐந்தாறு பறவைகள் நின்றனவே.
'திறமை மிகுந்தவன் நான்'என்றே ஒவ்வொன்றும்
தேர்தல் முழக்கங்கள் செய்தனவே.

'அன்பர்களே,என்னைத் தேர்ந்தெடுத்தால் நானும்
அதையும் இதையும் செய்வே'னெனவே
என்னென்ன வோகூறிக் கூட்டத்தார் தம்மையே
இழுத்திடப் பார்த்தன தங்கள்பக்கம்.

கண்ணைப் பறித்திடும் வண்ணத் தோகைதனைக்
காட்டி மயில்முன்னால் ஆடிவந்தே,
'என்னையே நீங்களும் தேர்ந்தெடுத் தால்மிக்க
இன்பம் அடையலாம்' என்றதுவே.

தோகையைக் காட்டிப் பசப்பும் மயிலதன்
தோற்றம் சபையைக் கவர்ந்ததுவாம்.
ஆகையால், அந்த மயிலினுக் கேசபை
அரசர் பதவி அளித்ததுவாம்.

பறவை அரசன் மயிலினை வாழ்த்தியே
பலத்த குரல்கள் எழும்புகையில்,
குருவி ஒன்றுமுன்னால் வந்துநின்று 'நானும்
கூறிடும் வார்த்தையைக் கேட்டிடுவீர்.

கருத்துடன் நம்மவர் உயிரையெல்லாம் என்றும்
காத்திடல் அரசரின் கடமையன்றோ ?
பருந்தும், கழுகும், வல்லூறுகளும் நம்மைப்
படுத்திடும் பாட்டுக்கும் எல்லையுண்டோ ?

அந்தப் பறவைகள் செய்யும் கொடுமைகள்
அனைத்தும் அடக்கிட வேண்டுமென்றால்,
இந்த மயிலால் முடிந்திடு மோ? இதை
எண்ணிப்பார்த் தீர்களோ ?' என்றதுவே.

சிந்தனை செய்தன பறவையெல்லாம். உடன்
தேர்தலை ரத்துமே செய்தனவே.
'இந்த மயிலின் பகட்டில் மயங்கி
இழந்தோம் மதியினை ' என்றனவே !




ஊரைக் காவல் செய்துவரும்
உயர்ந்த ஜாதி நாய்ஒன்று
வீரன் போலத் தலைநிமிர்ந்து
வீதியில் நடந்து சென்றதுவே.

செல்லும் போது தன்னுடைய
சிறிய குட்டி ஒன்றினையும்
மெல்ல அழைத்துச் சென்றதுவே.
வீதியில் நாய்கள் கண்டனவே.

சொறிநாய், வெறிநாய், தெருவினிலே
சோற்றுக் கலையும் நாய்களெலாம்
சிறிய குட்டியைக் கண்டதுமே
சேர்ந்து பலமாய்க் குலைத்தனவே.

குட்டி நாயைப் பார்த்தவைகள்
குலைத்ததை ஜாதி நாய்கண்டும்
சட்டை சிறிதும் செய்யாமல்
சாந்த மாகச் சென்றதுவே.

குட்டி நாய் :

அப்பா, உயர்ந்த ஜாதியென
அனைவரும் நம்மைப் போற்றுகிறார்.
அப்படியிருந்தும் எனைப்பார்த்தே
ஆத்திரக் கூச்சல் இவைபோட,

கண்டும் சும்மா செல்கின்றாய்.
கடித்துக் கொன்றிட வேண்டாமா ?
என்னே துணிச்சல் இவைகட்கு !
இவற்றைச் சும்மா விடலாமா ?

அப்பா நாய் :

கட்டிக் கரும்பே, கண்மணியே,
கண்டேன் ; கேட்டேன் அத்தனையும்.
எட்டி நின்றே குலைக்கின்ற
இந்தக் கோழை நாய்களெலாம்

உலகில் இருக்கும் வரையில்தான்
'உயர்ந்த ஜாதி' நாயென்றே
பலரும் நம்மை அழைத்திடுவார் ;
பாராட் டெல்லாம் கூறிடுவார்.

ஒன்றுடன் மற்றொன் றிருந்தாலே
உயர்ந்தது எதுவென் றறிந்திடலாம்.
நன்றாய் வாழ இந்நாய்கள்
நாமும் வாழ்த்துக் கூறிடுவோம்.

# பசுவின் கேள்வி



மாலை நேரம் நாய்ஒன்று
வைக்கோல் போரின் மீதினிலே

ஏறி அமர்ந்து கொண்டதுவே ;
இங்கும் அங்கும் பார்த்ததுவே.

மிக்க பசியுடன் ஒருபசுவும்
விரைவாய் அங்கு வந்ததுவே.

வந்ததும், அதனை நாய்பார்த்து,
'வள்வள்' என்று குலைத்ததுவே.

குலைத்திடும் நாயைக் கண்டதுமே
கொஞ்சம் பின்னால் போனபசு,

வைக்கோல் தின்னும் ஆசையிலே
மறுபடி நெருங்கிச் சென்றதுவே.

திரும்பத் திரும்ப அந்நாயும்
திசைகள் அதிரக் குலைத்திடவே

கோபம் கொண்ட பசுஉடனே,
கூறிட லானது இப்படியே :

'தானும் உண்ணுன் ; பிறருக்கும்
தருமம் செய்யான் அவன்போல

என்னைப் பார்த்துக் குலைக்கின்ருய்.
ஏனோ துரத்தி யடிக்கின்ருய் ?

வைக்கோல் தின்பது உன்னுடைய
வழக்கம் இல்லை ; உலகறியும்.

அப்படி யிருந்தும் வைக்கோலை
அனுதினம் தின்றே உடல்வளர்க்கும்

என்னைத் துரத்துதல் சரியாமோ ?
எண்ணிப் பார்ப்பாய், மடநாயே !'




ஏமாந்த ஆடுகள்

ஆட்டு மந்தை ஒன்றிடம்
அருமை நண்பன் போலவே
காட்டு ஓநாய் வந்தது ;
கனிந்த வார்த்தை உரைத்தது.

'அன்பு மிக்க தோழரே,
அடியேன் கூறப் போகிறேன்,
நண்ப ராக நாமெலாம்
நன்கு வாழும் வழிதனை.

என்றும் உங்கள் நண்பனுய்
இருக்க விரும்பி வந்திடும்
என்னை உங்கள் காவல்நாய்
எதிர்த்துத் துரத்தி விரட்டுதே !

காவல் நாயை விலக்கினுல்,
கஷ்டம் யாவும் விலகிடும்.
ஆவ லோடு நாமெலாம்
அருமை நண்பர் ஆகலாம்.'

உண்மை என்றே ஆடுகள்
ஓநாய் சொல்லை நம்பின.
கண்ணைப் போலக் காத்திடும்
காவல் நாயை விலக்கின.

காவல் இல்லா மந்தையில்
களித்து ஓநாய் புகுந்ததே ;
ஆவ லோடு ஒவ்வொரு
ஆடாய் தின்று தீர்த்ததே !



# இரண்டு பானைகள்



காற்று ஓங்கி அடித்தது.
கனத்த மழையும் பெய்தது.
ஆற்று வெள்ளம் பொருள்களை
அடித்துக் கொண்டு வந்தது.

அந்த வெள்ளம் தன்னிலே
அசைந்து, அசைந்து ஆடியே
வந்த பானை ஒன்றுமே
மண்ணினாலே ஆனதாம்.

மண்ணில் செய்த பானையை
வந்து நெருங்க லானது,
வெண்கலத்தால் ஆனதோர்
மிக்க அழகுப் பானையாம்.

அந்தப் பானை மிகமிக
அருகில் நெருங்கி வந்ததும்
இந்தப் பானை அதனிடம்
ஏக்கத் தோடே உரைத்தது.

'வெண்க லத்தால் ஆனநீ
மெதுவாய் என்னைத் தொடினுமே
என்றன் வாழ்வு முடிந்திடும்.
எட்டி நிற்பாய்; புண்ணியம் !

இருவர் பெயரும் ஒன்றுதான்.
இருந்த போதும், நாமுமே
உறவு கொள்ள முடியுமோ ?
ஒதுங்கிப் போவாய்' என்றது.

'குணத்தில் அதிக வேற்றுமை
கொண்ட இருவர் நண்பராய்
இணங்கி வாழ்தல் அரிதுதான்'
என்றே கதையில் அறிகிறோம்.



2994—6




# கொசுக்கடி

வழுக்கைத் தலையுடன் ஒருமனிதர்
வாசலில் அமர்ந்தார். அப்பொழுது,
கொழுத்துப் பருத்திடும் ஆசைமிகக்
கொண்டதோர் கொசுவும் வந்ததுவே.

வந்ததும், அந்த மனிதரது
வழுக்கைத் தலையில் அமர்ந்ததுவே ;
சந்தோஷத்துடன் கடித்ததுவே ;
தலையில் ரத்தம் குடித்ததுவே.

கடித்ததும் வலியைத் தாங்காமல்,
கையை ஓங்கி அக்கொசுவை,
அடித்திட முயன்றார். ஆனாலோ,
அக்கொசு தப்பிப் பிழைத்ததுவே !

ஓங்கிய கையோ அவர்தலையின்
உச்சியில் 'பட்'டென வீழ்ந்ததுவே.
ஆங்கே தப்பிப் பிழைத்தகொசு
அவரைப் பார்த்துக் கேட்டதுவே :

'சின்னஞ் சிறிய என்கடியைச்
சிறிதும் பொறுத்திட முடியாமல்,
என்னை அடித்துக் கொன்றிடவே
எத்தனம் செய்தீர். இப்பொழுது—

'பட்'டென உமது தலைமீதே
பலமாய் அடித்த உம்கையை
வெட்டி எறிந்து விடுவீரோ?
வேறு தண்டனை கொடுப்பீரோ?'

கொசுவின் வார்த்தையைக் கேட்டதுமே
கூறினர் அந்த மனிதருமே ;
'கொசுவே, இன்று தப்பியதால்
குறும்பாய்க் கேள்வி கேட்கின்றாய்.

வேண்டும் என்றே என்தலையை
விரும்பிக் கடித்த கொசுவே, கேள்.
வேண்டும் என்றா என்கையும்
வேதனை தந்தது? யோசனைசெய்.

கடித்துக் கடித்தே இரத்தமெலாம்
குடிக்கும் கொசுவே, உனைநானும்
அடித்துக் கொல்வேன். மேன்மேலும்,
அடிகள் கிடைப்பினும் பொறுத்திடுவே

பிறர்க்குத் துன்பம் கொடுப்பதனுல்,
பெரிதும் இன்பம் அடைவோரைத்
துரத்தித் துரத்தி அடித்திடுவேன் ;
துயரம் வரினும் சகித்திடுவேன்'



# ஓநாயின் கேள்வி



ஆட்டை வெட்டி இடையர்கள்
    ஆசை யோடு கூடியே
வீட்டில் உண்ண லாயினர் ;
    'விருந்து' என்று கூறினர்.

'கோனார் ஐயா !' என்றதும்,
    குரலைக் கேட்டுத் திரும்பினர்.
ஓநாய் ஒன்று அவ்விடம்
    உரைத்த வார்த்தை கேட்டனர் :

'வளர்த்த ஆட்டை நீங்களே
    வதைத்துக் கொன்று தின்கிறீர்.
உளத்தில் மகிழ்ச்சி பொங்கவே
    உண்டு ஏப்பம் விடுகிறீர்.

ஆட்டில் ஒன்றை நானுமே
அடித்துக் கொல்ல வந்திடின்,
வேட்டை நாயை ஏவுவீர் ;
வேங்கை போலச் சீறுவீர்.

என்னை விரட்டி விட்டபின்
ஏதும் போட்டி யின்றியே,
கொன்று ஆட்டைத் தின்கிறீர்,
கொடிய மனிதர் நீங்களே !"






கூலி வேலை செய்துவரும்
குடியா னவனின் வீட்டருகே
வேலி ஓரம் புற்றினிலே
விஷப்பாம் பொன்று வசித்ததுவே.

குடியா னவனின் அருமை மகன்
கொஞ்சும் மழலை பேசுபவன்
கொடிய பாம்பு கடித்ததனால்
கொல்லப் பட்டான் ஒருநாளில்.

'பழிக்குப் பழிநான் வாங்கிடுவேன் ;
பாம்பைக் கொன்று தீர்த்திடுவேன்'
மொழிந்தான் இப்படித் தந்தையுமே.
மூண்டது கோபம் பாம்பதன்மேல்.

மறுநாள் பாம்பு வெளியினிலே
வந்திடும் போது கோடரியை
எறிந்தான் : பாம்பு சாகாமல்
இழந்தது வாலின் நுனிமட்டும்.

நாகம் ஓடிச் சென்றவுடன்
நடுங்கினன் அவனும் பயத்தாலே.
தேகம் முழுதும் வியர்த்திடவே
சிந்தனை செய்தான் தீவிரமாய்.

'தப்பிச் சென்ற இப்பாம்பு
சமயம் பார்த்துக் கடித்துவிடும்.
எப்படி யும்நாம் இறந்திடுவோம்,
இந்தப் பாம்பால்' எனஎண்ணி,

பாம்பின் கோபம் தணித்திடவே
பாலை வாங்கி மறுநாளே
பாம்புப் புற்றில் ஊற்றினனே.
பார்த்ததும், பாம்பு உரைத்ததுவே:

'அருமை வாலை நானிழந்தேன்.
அன்புப் புதல்வனை நீஇழந்தாய்.
இருவர் மனமும் மாறிடுமோ ?
இருக்கும் பகைமை தீர்ந்திடுமோ ?

உன்னைப் பார்த்தால் என்வால்தான்
    உடனே எனக்கு நினைவில்வரும்.
என்னைப் பார்த்தால் நீயும்தான்
    இழந்த புதல்வனை எண்ணிடுவாய்.

பாலை ஊற்றி விட்டதனால்
    பகைமை தீர்ந்து போய்விடுமோ ?
வேலை இல்லா மானிடனே,
    வீண்தான் இதுவும் என்றறிவாய் !'



# காரணம்?



வேடன் ஒருவன் காட்டிலே
வேட்டை யாடக் கருதினன்,
கூட அழைத்துச் சென்றனன்,
கிழட்டு வேட்டை நாயையும்.

காட்டில் அலைந்து கடைசியில்
கண்டான் பன்றி ஒன்றினை.
வேட்டை நாயை ஏவினன்.
விரைந்தே அதுவும் பாய்ந்தது.

காட்டுப் பன்றி வேகமாய்க்
காற்றைப் போலச் சென்றது.
வேட்டை நாய்தான் இளைத்ததா ?
விடவே இல்லை; தொடர்ந்தது.

ஓய்ந்து போன பன்றியின்
ஓட்டம் குறைய லானது.
பாய்ந்து நாயும் உடனேயே
பன்றி காதைப் பிடித்தது.

பன்றி அங்கே துடிப்பதைப்
பார்த்து வேடன் மகிழ்ந்தனன் ;
'நன்று, நன்று' என்றனன் ;
நாடி ஓடி வந்தனன்.

அருகில் வேடன் வருவதை
அறிந்து பன்றி, காதினை
உருவிக் கொண்டு வேகமாய்
ஓடி மறைய லானது.

வேடன் இதனைக் கண்டனன் ;
மிகவும் கோபம் கொண்டனன் ;
ஓடி வந்து நாயிடம்
உள்ளம் வெம்பி உரைத்தனன்

'காடு முழுதும் சுற்றியே
கண்டோம் இந்தப் பன்றியை.
கேடு கெட்ட மிருகமே,
கிடைத்த பொருளை விட்டனை.'

இந்த வார்த்தை தன்னையே
இடித்து வேடன் கூறவே,
அந்த நாயும் சோகமாய்
அவனைப் பார்த்தே உரைத்தது

'என்னைச் சிறிய வயதிலே
இருந்து வளர்க்கும் ஐயனே,
என்னை யாரும் இதுவரை
ஏய்த்து ஓட முடிந்ததா ?

என்றும் உள்ள உணர்ச்சியில்
　　இம்மி கூடக் குறைந்திலேன்.
இன்று மட்டும் தோற்றது
　　என்ன கார ணத்தினுல்?

வயது அதிகம் ஆனது.
　　வலிமை குறைந்து போனது.
அயர்ந்து போனேன். பற்களும்
　　ஆட்டம் காண லாயின.

முன்னர் எனது திறமையை
　　முற்றும் உணர்ந்த தாங்களே
இன்று நானும் தோற்றதை
　　இகழ்ந்து பேச லாகுமோ ?

என்னை ஏனோ இகழ்கிறீர் ?
　　இதற்கெல் லாமே காரணம்,
என்னைக் கிழடு ஆக்கிய
　　இயற்கை தானே !' என்றது.



# எலிப் படை



எலிகள் யாவும் படைதி ரண்டு
கிளம்ப லாயின ;
எதிர்த்துப் பூனைக் கூட்டத் தோடு
போர்பு ரிந்தன.
புலிகள் போலப் பாய்ந்து பாய்ந்து
பாதி எலிகளைப்
பிடித்துக் கடித்துப் பூனைக் கூட்டம்
விழுங்கி விட்டதே !

பிழைத்து வந்த எலிகள் சேர்ந்து
கூட்டம் போட்டன.
பெரிதும் கொழுத்த எலி எழுந்து
பேச லானது :
'இளைக்க இளைக்க நாமெல் லோரும்
ஓடி வந்ததே
என்ன கார ணத்தி னாலே
என்று தெரியுமா ?

தலைவ ரென்று சிலரை வைத்தோம்.
அவர்கள் சொற்படி
தகுந்த முறையில் போர்பு ரிந்தால்,
வெற்றி கிட்டிடும்.
பலத்த சண்டை போடும் போது
தலைவர் யாரெனப்
பார்த்துக் கண்டு பிடிப்ப தற்கே
சிரம மாகுதே !

ஆத லினால் குச்சி யாலே
குல்லா செய்துநாம்
அவர்கள் தலையில் மாட்டி வைப்போம்,
கண்டு கொள்ளவே.
சேதம் ஏதும் இன்றி அவர்கள்
காட்டும் வழியிலே
சென்று வெற்றி பெறுவோம்' என்றே
எடுத்து ரைத்தது.

'சரிதான்' என்றே கூறி அவைகள்
குல்லா செய்தன.
தலைமை தாங்கும் எலிகள் தலையில்
மாட்டி விட்டன.
பெருமை யோடு தலைமை எலிகள்
முன்னே சென்றன.
பின்தொ டர்ந்து மற்ற எலிகள்
போக லாயின.

படைதி ரண்டு எலிகள் வரவே
பார்த்த பூனைகள்
பாய்ந்து வந்து மேல்வி ழுந்து
தாக்க லாயின.
நடுந டுங்கி எலிகள் யாவும்
முதுகைக் காட்டியே,
நான்கு திசையும் தலைதெ றிக்க
ஓட லாயின !

தப்பிச் சென்ற எலிகள் உடனே
வளையில் ஒளிந்தன.
தலையில் குல்லா தரித்த எலிகள்
தவிக்க லாயின !
அப்போ தந்தக் குல்லா வளைக்குள்
நுழைந்தி டாததால்
அந்தோ, வெளியில் அந்த எலிகள்
திகைத்து நின்றன !

தலையில் குல்லா தரித்து நின்ற
எலிகள் தம்மையே
தாவி வந்த பூனைக் கூட்டம்
பிடித்துக் கொண்டதே !
வெலவெ லத்துப் போன அந்தத்
தலைமை எலிகளின்
மேலே பாய்ந்து பூனை யாவும்
கடித்துத் தின்றன !



# கழுகும் காக்கையும்

காட்டு வயலில் செம்மறி
ஆட்டு மந்தை ஒன்றுமே
கூட்ட மாகத் திரிந்தது;
குறையில் லாமல் மேய்ந்தது.

வட்ட மிட்டு அவ்விடம்
வந்த கழுகு, மந்தையில்
குட்டி ஆடு ஒன்றினைக்
கூர்ந்து பார்க்க லானது.

பார்த்துக் கொண்டே வேகமாய்ப்
பாய்ந்தே அதனைக் கால்களால்
சேர்த்து நன்கு தூக்கியே
சிறக டித்துப் பறந்தது.



2994—7

அருகில் இருந்த குன்றிலே
அமர்ந்திருந்த காகமும்,
பறந்து சென்ற கழுகினைப்
பார்த்து நினைக்க லானது:

'கழுகு சிறிய ஆட்டினைக்
கவர்ந்து செல்லு கின்றது.
கொழுத்த பெரிய ஆட்டையே
கொண்டு நானும் செல்லுவேன்.'

என்றே எண்ணிக் காகமும்
எழுந்து பறந்து சென்றது.
நன்கு கொழுத்த ஆட்டினை
நாடி முதுகில் அமர்ந்தது.

முறுக்கி முறுக்கிக் கால்களால்
முதுகி லுள்ள மயிர்களை
இறுக்கிப் பிடித்துத் தூக்கவே
எத்தனங்கள் செய்தது.

கனம் மிகுந்த ஆட்டினைக்
காகம் தூக்க முடியுமோ?
மனத்தி லிருந்த ஆசையும்
மாய்ந்து மறைய லானது.

ஆசை மறைந்த தாயினும்
ஐயோ, கால்கள் சிக்கின !
வீசிச் சிறகை அடித்தது.
வீண்தான். தப்ப முடியுமோ ?

மாட்டிக் கொண்டு தவித்திடும்
மடமை மிக்க காக்கையை
ஆட்டுக் காரன் பார்த்தனன்;
ஆவ லோடு நெருங்கினன்.

பறக்க வழியும் இன்றியே
பரித விக்கும் காக்கையை,
இறக்கை தன்னை வெட்டியே
எடுத்து வீடு சென்றனன்.

'அப்பா, இதுபோல் பறவையை
அடியேன் பார்த்த தில்லையே
எப்போ தப்பா பிடித்தனை ?
என்ன பறவை சொல்லுவாய்?'

என்று கேட்ட மகனிடம்
இடையன் கூற லாயினன்:
"அன்பு மிக்க மைந்தனே,
அதிச யம்போல் பார்ப்பதேன்?

கொழுத்த ஆட்டைத் தூக்கியே
கொண்டு செல்லும் ஆசையில்
கழுகு என்று தன்னையே
கருதிக் கெட்ட காக்கைதான்!"

# இன்பமும் துன்பமும்





வெப்பக் கொடுமை தாங்காமல்
வீதி நடுவே செத்ததுபோல்
சர்ப்பம் ஒன்று கிடந்ததடா.
சற்றும் அசைய வில்லையடா.

இரையைத் தேடிப் பறந்துமிக
ஏங்கித் திரிந்த ஒருகாகம்
விரைந்து கீழே பாய்ந்ததடா.
'விர்'ரெனத் தூக்கிச் சென்றதடா.

செத்துப் போனது பாம்பெனவே
தீர்மா னித்தே அக்காக்கை
கொத்தித் தின்னப் பார்த்ததடா.
கொடிய காலம் வந்ததடா!

தூக்கம் நீங்கி அப்பாம்பு
துடிது டித்தே எழுந்ததடா.
தூக்கிச் சென்ற காக்கைதனைத்
துணிந்து கடித்து விட்டதடா.

கடித்ததும் வலியைத் தாங்காமல்
காக்கை சுருண்டு வீழ்ந்ததடா.
துடித்தது, சாகும் தறுவாயில்
சொல்லிய வார்த்தைகள் இவையேயாம்:

'இன்பம் பெறலாம் இவ்வுணவால்
எனநான் நினைத்தேன். ஆனாலோ
துன்பம் பெற்றேன். என்வாழ்வும்
சோகக் கதையாய் முடிந்ததுவே!'



# சோதிடர் ஓடினார்!



சந்தை கூடும் இடத்திலே
சாலை ஓரம் தன்னிலே
குந்தி இருந்த சோதிடர்
குறிகள் பார்த்துக் கூறுவார்.

'அதிர்ஷ்டப் பரிசு கிடைக்குமா?'
'ஆண்குழந்தை பிறக்குமா?'
'மதிப்பு உலகில் உயருமா?'
'மனத்தில் கவலை நீங்குமா?'

இந்த வகையில் கேள்விகள்
ஏது ஏதோ அவரிடம்
வந்து மக்கள் கேட்பது
வழக்கமாகி விட்டது.

கும்பல் ஒன்று சுற்றிலும்
கூடி அன்று நிற்கையில்,
அம்பு போலப் பாய்ந்துமே
அங்கோர் பையன் வந்தனன்.

இரைக்க இரைக்க வந்தவன்
'என்னே ! நமது சோதிடர்
இருக்கும் வீடு தீயிலே
எரியு' தென்றே கதறினன்.

பையன் சொல்லைக் கேட்டதும்
பதறி எழுந்த சோதிடர்,
'ஐயோ, அப்பா !' என்றுமே
அலறி ஓட்டம் பிடித்தனர்.

முன்னால் அவரும் வேகமாய்
மூச்சுப் பிடித்து ஓடவே,
பின்னால் அவரைத் தொடர்ந்தது,
பெரிய கூட்டம் ஒன்றுமே.

நாடி தளர்ந்து விட்டது.
நாக்குத் தொங்கிப் போனது.
ஓடி வந்தார் அப்படி,
உடல்கு லுங்கச் சோதிடர்!

'மனைவி மக்கள் தீயிலே
மடிந்து, வீட்டில் உள்ளவை
அனைத்தும் பொசுங்கிச் சாம்பலாய்
ஆன தென்றே எண்ணினர்.

எண்ணம் போல வீட்டிலே
எதுவும் நடக்க வில்லையே !
என்றும் உள்ள நிலையிலே
இருந்த வீட்டைக் கண்டனர்.

புரளி செய்த பையனைப்
பிடித்துக் கொண்டு சோதிடர்
மிரட்டிக் கேட்க லாயினர்.
மீசை இரண்டும் துடித்தன.

'நாட்டுக் கெல்லாம் சோதிடம்
நானு ரைப்பேன் என்கிறீர்.
வீட்டில் தீ,தீ என்றதும்,
விழுந்த டித்து வருகிறீர் !

எந்த விஷயம் நடப்பினும்
எனக்குத தெரியும் என்கிறீர்.
சொந்த விஷயம் அறிந்திடச்
சோதி டத்தால் முடிந்ததோ?,

பையன் இதனைச் சொன்னதும்
பக்கம் இருந்த அனைவரும்
கையைத் தட்ட லாயினர்;
கலகல வென்று சிரித்தனர் !

# பரிசு!



முருகன் வேட்டை ஆடினன்;
முயலில் ஒன்றைப் பிடித்தனன்;
பெருமை யோடு தோளிலே
போட்டுக் கொண்டு திரும்பினன்.

எதிரே ஒருவன் குதிரையில்
ஏறி வரவே கண்டனன்.
குதிரைக் காரன் முயலினைக்
கூர்ந்து பார்த்துக் கூறினன்:

'அன்பு மிக்க நண்பனே,
அந்த முயலைத் தந்திடு.
என்ன விலை நீ கேட்பினும்
இஷ்டத் தோடு தருகிறேன்'

குதிரைக் காரன் இப்படிக்
கூறக் கேட்ட முருகனும்
அதிக ஆசை கொண்டனன்!
'ஐந்து பத்துக் கேட்டனன்.

'சரிதான்' என்றே அவனுமே
தலையை ஆட்டிக் கூறியே,
முருக னுடைய முயலினை
முதலில் வாங்கிக் கொண்டனன்.

தட்டி ஓட்ட லாயினன்,
தயக்க மின்றிக் குதிரையை.
'துட்டு! துட்டு!, என்றுமே
துரத்தி முருகன் ஓடினன்,

துரத்திச் சென்றான்; ஆயினும்
சோர்ந்து போனான். மிகவுமே
உரத்த குரலில் கூவியும்
ஒன்று மில்லை பயனுமே.

அதிக தூரம் ஓடியே
அலுத்துப் போன முருகனும்
குதிரை சென்ற திசையிலே
குரல் எடுத்துக் கூறினன்;

'குதிரைக் கார நண்பனே'
கொண்டு செல்வாய் முயலினை.
அதனை உனக்கு நானுமே
அளித்த பரிசாய்க் கொள்ளுவாய் !






ஒருநாள் இரையே கிடைக்காமல்
ஓநாய் ஒன்று அலைந்ததுவே.
அருகில் ஏதோ குரல்கேட்க
அங்கே சென்று பார்த்ததுவே.

சின்னக் குழந்தை அழுதிடவே
சொன்னாள் தாயார் அதனிடத்தே.
'உன்னை வெளியே எறிந்திடுவேன் ;
ஓநாய் தின்ன விட்டிடுவேன்.'

தாயார் சொன்னது நிஜமென்றும்,
தனக்கு நல்ல உணவென்றும்,
ஓநாய் எண்ணி அவ்விடத்தே
உட்கார்ந் திருந்தது, ஆவலுடன்.

அஞ்சி அந்தக் குழந்தையுமே
அழுகை நிறுத்திட, அம்மாவும்
கொஞ்சி மகிழ்வுடன் கூறுகிறாள்,
குழந்தை உள்ளம் குளிர்ந்திடவே:

'ஓநாய் வந்தால் உடனேயே
உதைத்துக் கொல்வோம்' என்றதுமே
ஓநாய் கேட்டு உடல்நடுங்கி
ஓட்டம் பிடித்தது காட்டிற்கே!



# ஒரு நாள் வாழ்வு





மலர்கள் நிறைந்த சோலையிலே
வாடா மல்லிகைப் பூவொன்று

அருகில் இருந்த ரோஜாவை
அழைத்துக் கூற லானதுவே:

'அழகு மிக்க மலரேநீ
அற்புத வாசனை பரப்புகிறாய்.

கண்டோர் உள்ளம் கவருகிறாய்.
கடவுள் பூசைக் குதவுகிறாய்.

பெண்கள் தலையில் தோன்றுகிறாய்.
பெரியோர் கழுத்தில் விளங்குகிறாய்.

உன்போல் பெருமை உடையவர்கள்
உலகில் உண்டோ வேறொருவர்?

என்றதும். உடனே ரோஜாப்பூ
புன்சிரிப் புடனே கூறியது:

ஆமாம், வாடா மல்லிகையே.
ஆயினும், இந்த உலகினிலே

எத்தனை நாட்கள் வாழ்கின்றேன் ?
எனது வாழ்வே ஒருநாள்தான்.

மனிதர் என்னைப் பறித்ததுமே
மனமும் உடலும் வாடுகிறேன்.

அவர்கள் என்னைப் பறிக்காமல்
அப்படி யேதான் விட்டிடினும்,

மறுநாள் கீழே வீழ்கின்றேன்.
மண்ணோடு மண்ணாய்ப் போகின்றேன்.

அழகும் மணமும் இருந்திடினும்
அடியேன் உன்போல் பலநாட்கள்

உலகில் வாழ முடிந்திடுமோ ?
உரைப்பாய், வாடா மல்லிகையே !,

# கதை சொன்னவர் கதை

அந்தக் காலத்தில் சந்தையில் ஆடுமாடுகளை விற்பதைப் போல் மனிதர்களையும் விற்று வந்தனர். அப்படி விற்கப்பட்ட ஒரு மனிதர்தாம் ஈசாப். அவரை சாந்தஸ் என்பவர் விலைக்கு வாங்கித் தம்மிடம் அடிமையாக வைத்திருந்தார்.

ஒரு நாள் சாந்தஸ் குடி வெறியில் தமது நண்பர்களிடம்! ஒரு பந்தயம் கட்டிவிட்டார். அதாவது சமுத்திரத்தில் உள்ள தண்ணீர் முழுவதையும் அவர் குடித்துப் பொட்டலாக்கிவிடுவதாகவும், அப்படிச் செய்யாவிடில், தம் சொத்து முழுவதையும் கொடுத்து விடுவதாகவும் கூறினார்.

ஆனால், மயக்கம் தெளிந்ததும், தாம் செய்த முட்டாள் தனத்தை உணர்ந்தார். 'இதற்கு என்ன வழி?' என்று தம்மிடம் அடிமையாக இருந்த ஈசாப்பைக் கேட்டார்.

ஈசாப் ஒரு நல்ல யோசனை கூறினார்; அதன்படி சமுத்திரத்திலுள்ள நீரைக் குடிக்க சாந்தஸ் ஈசாப்புடன் புறப்பட்டார். மற்றவர்களும் சென்றனர்.

சமுத்திரத்தை அடைந்ததும், ஈசாப் அங்கு நின்றவர்களைப் பார்த்து, "நண்பர்களே, எங்கள் எஜமானர் சமுத்திரத்திலுள்ள நீர் முழுவதையும் குடிக்கத் தயார்தான். அவர் சமுத்திரத்திலுள்ள நீரை மட்டுமே குடிப்பதாகக் கூறினார். ஆனால் இப்போது பல ஆறுகளிலிருந்தும் நீர் வந்து சமுத்திரத்தில் விழுந்துகொண்டே யிருக்கின்றதே ! குடிக்கக் குடிக்கத் தண்ணீர் வந்து கொண்டேயிருந்தால், எப்படிக் குடித்துப் பொட்டலாக்குவது ? ஆகையால், முதலில் ஆற்று நீர் சமுத்திரத்தில் விழாதபடி முகத்துவாரத்திலேயே அடைத்துவிட வேண்டும். அப்போதுதான் என் எஜமானர் சொன்னபடி செய்வார்" என்றார்.



2994—8

உடனே, வேடிக்கை பார்க்க அங்கு வந்திருந்தவர்கள், ''ஆமாம்; ஆமாம். அதுதான் சரி'' என்று கூச்சலிட்டனர்.

பந்தயம் கட்டியவர்களுக்கு என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை வெட்கத்துடன் திரும்பிவிட்டனர்.

இப்படி அவர் எவ்வளவோ வேலைகளை யுக்தியுடன் செய்திருக்கிருர். இதனுல்தான் அவருக்கு விரைவிலே விடுதலை கிடைத்தது. அடிமையாக இல்லாமல் எங்கும் இஷ்டம்போல் சுற்றித் திரிய முடிந்தது. சுற்றித் திரிந்து குட்டிக் கதைகளைக் கூறவும் முடிந்தது.

ஈசாப் மிகுந்த புத்திசாலி. அவர் பேச்சும், செய்கையுமே அதை நன்கு காட்டுகின்றன.

∴ ∴ ∴

அவர் அடிமையாக இருந்தபோது, ஒரு நாள் அவருடைய எஜமானர் வெளியூர் செல்லப் புறப்பட்டார். சாமான்களைத் தூக்கி வருவதற்காகத் தம்முடன் சில அடிமைகளையும் அழைத்துச் செல்வது அந்த எஜமானரின் வழக்கம்.

அன்று எடுத்துச் செல்ல வேண்டிய சாமான்களை ஈசாப் ஒரு முறை பார்த்தார். பிறகு, மற்ற அடிமைகளைப் பார்த்து, ''எனக்கு அதிக கனமில்லாத சுமையைத் தர வேண்டும்'' என்று கேட்டார்.

ஈசாப்பிடம், மற்ற வேலைக்காரர்களுக்கு எப்போதுமே நல்ல மதிப்பு உண்டு. ஆகையால், ''சரி, உனக்கு வேண்டிய சாமானை எடுத்துக்கொள்'' என்ருர்கள், அவர்கள்.

உடனே ஈசாப் அங்கிருந்த பெரிய கூடை ஒன்றை எடுத்துக் கொண்டார். அக்கூடை நிறைய ரொட்டிகள் இருந்தன, வழியில் சாப்பிடுவதற்காக. ஈசாப் பெரிய கூடையைத் தூக்கிக் கொண்டதும், மற்ற அடிமைகள் சிரித்தார்கள்.

““என்னப்பா இது! கனமில்லாத சுமையாக வேண்டு மென்று கேட்டாய். இவ்வளவு பெரிய கூடையைத் தூக்கிக் கொண்டிருக்கிருயே !“ என்ருர்கள்.

ஈசாப் ஒன்றும் பதில் கூறவில்லை.

ஆனல், ஈசாப் ஒரு முட்டாளல்ல என்பதை அவருடைய நண்பர்கள் தெரிந்துகொள்ள வெகு நேரமாகவில்லை. ஈசாப் வைத்திருந்த கூடையிலிருந்த ரொட்டிகளை வேளா வேளைக்கு அவர்கள் எடுத்துத் தின்று வந்ததால், கனம் குறைந்து கொண்டே வந்தது. செல்ல வேண்டிய ஊரை நெருங்கும்போது ஈசாப் வெறும் கூடையுடன் ஆனந்தமாக நடந்து சென்ருர். ஆனல், மற்றவர்கள் அப்படிச் செல்லவில்லை ; போகப் போக அவர்கள் சுமையைத் தூக்க முடியாமல் அலுத்துப்போய் விட்டனர்.

அப்போதுதான் அவர்கள் ஈசாப்பின் புத்திசாலித்தனத்தை உணர்ந்தனர்!

∴ ∴ ∴

ஈசாப் வசித்த ஊரில் பொது மக்கள் குளிப்பதற்காக ஒரு குளம் அமைக்கப்பட்டிருந்தது.

அன்று ஈசாப்பின் எஜமானர் அந்தக் குளத்தில் குளிக்க எண்ணினுர். உடனே ஈசாப்பை அழைத்து, அந்தக் குளத்தில் கூட்டம் இருக்கிறதா என்று பார்த்து வரச் சொன்னுர். ஈசாப் போய்ப் பார்த்தார்.

அப்போது அந்தக் குளத்தின் வாயிலில் நீளமான ஒரு கல் கிடந்தது.

குளிக்கச் செல்வோரில் சிலர் அதைத் தாண்டிக்கொண்டு சென்றனர்; சிலர் அதில் தடுக்கி விழுந்து, பிறகு எழுந்து சென்றனர். ஆனல், ஒருவர்கூட அதை அப்புறப்படுத்த வில்லை.

ஈசாப் இந்தக் காட்சியைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். அதே சமயம் அங்கு வந்தார் ஒருவர். அவர் அந்தக் கல்லைத் தூக்கி ஓர் ஓரத்தில் போட்டுவிட்டுக் குளிக்கச் சென்ருர்.

ஈசாப் உடனே திரும்பித் தம் எஜமானரிடம் சென்று, ''குளத்தில் ஒரே ஒரு மனிதர்தான் குளித்துக் கொண்டிருக்கிறார்'' என்றார்.

''சரி, போய்க் குளித்துவிட்டு வருகிறேன்'' என்று எஜமானர் புறப்பட்டுக் குளத்திற்குச் சென்றார்.

அங்கு ஏராளமானவர்கள் குளித்துக்கொண்டிருந்தனர். உடனே எஜமானருக்கு ஈசாப்பின் மேல் கோபம் வந்துவிட்டது. வேகமாக வீட்டுக்குத் திரும்பி வந்தார். ஈசாப்பை அழைத்து, ''உனக்கென்ன, கண் பொட்டையா? குளத்தில் எத்தனை பேர் குளிக்கிறார்கள்? ஒரே ஒருவர் குளிப்பதாகக் கூறினாயே!'' என்று கேட்டார்.

''ஆம் எஜமானே, அவர் ஒருவர்தான் மனிதர்! வழியிலே கிடந்த கல்லை அப்புறப்படுத்தி, மற்றவர்களை விழாமல் காப்பாற்றிய அவர் ஒருவர்தான் மனிதர்!'' என்றார் ஈசாப்.

தடுக்கி விழவைக்கும் கல்லைக் கண்டும், பேசாமல் சென்று குளித்துக்கொண்டிருந்தார்களே, அவர்களை மனிதர் என்று சொல்ல விரும்பவில்லை, நம் ஈசாப். இதை அறிந்த எஜமானர் ஈசாப்பின் புத்தி நுட்பத்தைப் பாராட்டினார். இப்படி ஈசாப்பைப் பற்றி எத்தனையோ கதைகள் !

ஈசாப்பின் கருத்துக்கள் சாகா வரம் பெற்றவை. அவை இந்தக் காலத்துக்கு மட்டுமல்ல; எந்தக் காலத்துக்குமே பயன் தரக் கூடியவை.





ஈசாப்

கிரேக்க அறிஞராகிய ஈசாப்பின் கதைகள் உலகமெல்லாம் பரவும், அக்கதைகளைச் சிறுவர் முதல் பெரியவர் வரை படித்துப் பயனடைவர் என்று அவர் காலத்தில் எவருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். அப்படி எதிர்பார்த்திருந்தால், அவரது உருவப் படத்தை எத்தனையோ ஓவியர்கள் போட்டி போட்டுக் கொண்டு தீட்டியிருப்பார்கள். புகைப்படம் எடுக்கும் வசதியும் அக்காலத்தில் இல்லை. ஆயினும், அவரது உருவத்தைக் கற்பனைக் கண்கொண்டு பார்த்து வரைந்திருக்கிறார் வெலாஸ் குயிஸ் என்ற ஸ்பெயின் தேசத்து ஓவியர்.